
விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.03, 2ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 147 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 01 செவ்வாய்க்கிழமை (14.05.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## யாழ்.பல்கலையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி



15

### திடீர் சுகயீனம் காரணமாக

## 12 வயது மாணவி வவுனியாவில் மரணம்

(வவுனியா)

திடீர் சுகயீனம் காரணமாக 12 வயது பாடசாலை மாணவி ஒருவர் மரணமடைந்துள்ளார்.

வவுனியா ஓமந்தை காயங்குளம் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் ஓமந்தை மகா வித்தியாலய



15

## முள்ளிவாய்க்கால் ஆத்மாக்கள்

# ராஜபக்ஷ குடும்பத்தை நிம்மதியாக வாழவிடாது

## சபையில் சிறீதரன் எம்.பி

(கொழும்பு)

- முள்ளிவாய்க்கால் படுகொலையை பாராளுமன்றில் நினைவுகூர்ந்த சிறீதரன்.
- சிரட்டை ஒன்றை சமர்ப்பித்து பாராளுமன்ற நூதன சாலையில் வைக்குமாறு கோரிக்கை.

(16ஆம் பக்கம் பார்க்க)



### வடக்கில் சில நாட்கள் மழை தொடரும்

(யாழ்ப்பாணம்)

இலங்கையைச் சூழவுள்ள பகுதிகளில் வளிமண்டலத்தில் ஏற்பட்ட தளம்பல் நிலை காரணமாக அடுத்த சில நாட்களுக்கு வடக்கு உட்பட நாட்டின் பல பிரதேசங்களிலும் மழையுடனான கால நிலை தொடரக்கூடிய

15

### முறிகண்டியில்

## ஆணொருவரின் சடலம் மீட்பு

(முல்லைத்தீவு)

முறிகண்டி பிரதேசத்தில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு - மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முறிகண்டி பிள்ளையார் கோவிலுக்கு அண்மித்த பகுதியில்

15

### வடமராட்சி கிழக்கில்

## கிணற்றுக்குள் இருந்து ஆணின் சடலம் மீட்பு

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு கடற்கரை பகுதியில் கிணற்றுக்குள் இருந்து நேற்று ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது

புத்தளத்தைச் சேர்ந்த மனோராசன் உடப்பு என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

15

## முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறிய குற்றச்சாட்டில் கைதானவர்கள்

### 14 நாட்கள் விளக்கமறியலில்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம் சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேனையூர் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி பரிமாறினார்கள் என பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட, நால்வரையும் எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மூதூர் நீதிமன்ற நீதவான் தஸ்னீம் பௌசான் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

நீதிமன்றில் நேற்று

02

### ஊர்காவற்துறை – நாரந்தனையில்

## யாழ்.சிறைச்சாலை பேருந்து விபத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஊர்காவற்றுறை வீதி நாரந்தனை பகுதியில் யாழ் சிறைச்சாலை பேருந்தும் தனியார் ஹயஸ் வாகனமும் மோதுண்டு நேற்று மாலை விபத்துக்குள்ளானது

இச்சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

ஊர்காவற்றுறை

15

### மன்னாரில் கடலில் வீழ்ந்த மீனவர் பலி

(மன்னார்)

மன்னார் பள்ளிமுனை கடற்பரப்பில் இருந்து நேற்று மாலை கடற்றொழிலுக்கு சென்ற குடும்பஸ்தர் ஒருவர் வள்ளம் தாண்டதில் கடலில் விழுந்து உயிரிழந்தார்.

உயிரிழந்தவர்

15

## நினைவேந்தலைத் தடுப்பது உரிமையை மழுங்கடிப்பதாகும்

### சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(கரணவாய்)

நினைவேந்தலை தடுக்கிற வண்ணமாக செய்கின்ற செயற்பாடு அனைத்தும் எங்களது மக்களது உரித்தை சர்வதேச மட்டத்தில் எங்களுக்கு இருக்கின்ற உரிமையை

15



15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் – நயினாதீவு

**2024 ஆம் ஆண்டு உயர்திருவிழாவிற்கான ஒலி,ஒளி அமைப்புக்கான கூறுவிலை கோருதல்**

கோவிலின் 2024 ஆம் ஆண்டு உயர்திருவிழாவிற்கான ஒலி, ஒளி அமைப்புக்கான பொருட்கள்,கூலிகள் உள்ளடங்கலாக கூறுவிலைகள் கோரப்படுகின்றது.

கூறுவிலையினை சமர்ப்பிக்க விரும்புபவர்கள் கோவிலின் காரியாலயத்தில் கூறுவிலைப் படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி 2024.05.23 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்னதாக காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியினுள் சேர்ப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளவதுடன் பதிவு அஞ்சல் மூலம் அனுப்ப விரும்புபவர்கள் இடது பக்க மேல் மூலையில் **2024 ஆம் ஆண்டுக்கான ஒலி,ஒளி அமைப்புக்கான கூறுவிலை** எனக் குறிப்பிட்டு **செயலாளர்,அறங்காவலர்சபை, ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு** என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

ந.மோகனரூபன்
செயலாளர்,
அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு

(C-0356)



## முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு வன்னிவிளாங்குளம்

## அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

### ஆலய வருடாந்த பொங்கல் விழா

**17.05.2024 வெள்ளிக்கிழமை**

**பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்**
**காத்தவளே பின்கரந்தவளே கறைக்கண்டனுக்கு**
**மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே**
**மாத்தவளே உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே**

**அம்பிகை அடியார்களே**

வன்னி விளாங்குளம் பதியில் பன்நெடுங்காலமாக கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் வருடாந்த பொங்கல் விழா நிகழும் குரோதி வருடம் வைகாசித் திங்கள் 04ம் நாள் (17.05.2024) வெள்ளிக்கிழமை வழமைபோல் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

அன்று நண்பகல் அம்பாளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் விஷேட அபிஷேகமும் அலங்கார பூசைகளும் நடைபெறும். இரவு 09.00 மணியளவில் மடைப்பண்டம் எடுக்கும் நிகழ்வும் தொடர்ந்து பொங்கல் விழா நிகழ்வுகளும் நடைபெறும். அடியார்கள் பூசைக்குரிய அபிஷேகப் பொருட்கள், பூக்கள், பூமாலைகள் போன்றவற்றை தந்துதவுமாறு வேண்டுகின்றோம். வழமை போல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் எமது சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்ட நிதி சேகரிக்கும் தொண்டர்கள் தங்கள் இல்லம் நாடி வருவார்கள் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் உங்களால் இயன்றளவு நிதி வழங்கி பொங்கல் விழாவைச் சிறப்பாக நிறைவு செய்வதோடு அனைத்து அடியார்களும் கலந்து கொண்டு எல்லாம் வல்ல ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

குறிப்பு:-

1) பொங்கல் தினத்தன்று விஷேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளது.
2) பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.
3) பொங்கல் தினந்தன்று வியாபார நிலையங்கள் அமைக்க விரும்புவோர் 15.05.2024 காலை 10.00 மணி தொடக்கம் தங்கள் பெயர்களை பதிவு செய்து உரிய பணத்தினை செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொண்டால் மட்டுமே வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படுவீர்கள் என்பதை அறியத் தருகின்றோம்.


- உணவு கையாள்பவர்கள் அனைவரும் மருத்துவச் சான்றிதழ், நீர்ப் பகுப்பாய்வுச் சான்றிதழ், இவ்வாண்டுக்குரிய பிரதேச சபை அனுமதிப் பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
- உணவு கையாள்பவர்கள் ஏப்ரன், தொப்பி என்பன அணிதல் வேண்டும்.
- மூடியுடன் கூடிய கழிவகற்றல் தொட்டி, வெள்ளைத்தாள் பாவனை, உணவு இடுக்கிப்பாவனை போன்ற சுகாதார விதிமுறைகளை பின்பற்றுதல்வேண்டும்

**அனைவரையும் வருக வருகவென அழைத்து நிற்கின்றோம்.**

**ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய திருப்பணிச் சபை,**
**வன்னிவிளாங்குளம், மாங்குளம்.**

(C-0358)

## வற்றாப்பளை கண்ணகி அம்மனின் பொங்கலை முன்னிட்டு தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு



(முல்லைத்தீவு)

வரலாற்றுச் சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு நேற்று தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை சிறப்பாக இடம்பெறவுள்ளது.

குறித்த ஆலயத்தில் பொங்கல் நிகழ்வு நடத்துவதற்கு முன்பாக கடல் தீர்த்தம் எடுத்து விளக்கு எரிக்கும் நிகழ்வு ஒவ் வொரு முறையும் நடத்தப்படுகின்றமை வழமையாகும்.

அதற்கமைய இம்முறையும், கடல் தீர்த்தம் எடுத்து வரப்பட்டு, முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத் திற்கு எடுத்து செல்லப்பட்டு அங்கு பானையில் இடப்பட்டு அதன் பின்னர் உப்பு நீர் விளக்கு எரிய விடப் படும்.

குறித்த விளக்கு தொடர்ந்து எரிய விடப்பட்டு எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காட்டா விநாயகர் ஆலயத்தில் பொங்கல் நிகழ்வு நடைபெற்று அதனைத் தொடர்ந்தே வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயப் பொங்கல் இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## முள்ளிவாய்க்...

ஆஜர்படுத்திய போதே இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

முள்ளி வாய்க்கால் கஞ்சி காய்ச்சி பறிமாறிய பல்கலைக்கழக மாணவி உட்பட நால்வர் இவ்வாறு நேற்று முன்தினம் சம்பூர் பொலிஸாரினால் கைது செய் யப்பட்டனர்.

இதில் கே.விஜிதா வயது(40), எஸ்.சுஜானி வயது (40) என்.ஹரிகர குமார் வயது( 43), கிழக்கு பல்கலைக்கு தெரிவாகியுள்ள கலைப் பீட மாணவி க.தேமிலா வயது (22) என்பவர்களே இவ்வாறு கைதாகினர்.

நீதிமன்ற தடை உத்தரவு வழங்கப்பட்டு அதனை பொலிஸார் அவர்களிடத்தில் கையளித்து தெளிவு படுத்திய போதிலும் அதனை மீறி குறித்த கஞ்சிபரிமாறும் நிகழ்வை நடத்திய குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. (ம-7,10)

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1948 - 07 - 26 | 13 - 05 - 2024 |



## கந்தசாமி சந்திரசேகரம்

( ஓய்வு நிலை உள்ளக கட்டுப்பாட்டு கணக்காய்வாளர்
வடக்கு கிழக்கு மாகாணம், கணக்காளர் வலயக்கல்வி
அலுவலகம் வடமராட்சி, வவுனியா தெற்கு )

மடத்தடி, அல்வாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் காந்தியூர் புலோலி வடமேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சந்திரசேகரம் அவர்கள் நேற்று (13.05.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி - மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஆறுமுகம் - செல்லம்மா தம்பதியினரின் மருமகனும் ராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், கனகசபை, சரஸ்வதி, பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் சிவாஜினி, சசிகரன்(லண்டன்), சயூசரன் (லண்டன் - பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் குகபாலன் (பிரதம கணக்காளர் - மாகாண திரைசேரி வடக்கு மாகாண சபை), மகேஸ்வரி (லண்டன்), வினோஜா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் கோபிகா, சானுஜா, அகரன் (லண்டன்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.05.2024) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

காந்தியூர்,
புலோலி

*தகவல்:*
குடும்பத்தினர்
077 659 0402

(C-0359)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவேந்தல்களை தடுப்பதால் வரலாறுகளை அழிக்க முடியாது!

## மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர்



(கொழும்பு)

**நோய் பரவும் ஆபத்து என தெரிவித்து முள்ளி வாய்க்கால் கஞ்சி விநியோகத்தினை தடுத்த இலங்கை பொலிஸார் இதே காரணத்திற்காக வெசாக் தன்சல்களை தடை செய்யுமாறு நீதிமன்றத்திடம் வேண்டுகோள் விடுப்பார்களா என இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

கஞ்சியை பரிமாறிக் கொண்டமைக்காக தமிழர்கள் கைதுசெய்யப்படுகின்றனர். இறுதி யுத்தத்தின் போது அவர்களுக்கு கிடைத்த ஒரே உணவு இது. யுத்தத்தின் இறுதி தருணங்களில் கொல்லப்பட்ட மக்களை நினைவுகூரவிடாமல் தடுக்கப்படுகின்றனர்.

வரலாற்றை அழிப்பதும் பொதுமக்களின் உயிரிழப்பிற்கு அரசாங்கம் காரணமில்லை என மறுப்பதுமே நினை வேந்தல்களை தடுப்பதின் நோக்கம்.

மக்கள் ஒன்றுகூடுவதன் மூலம் உணவை பரிமாறிக் கொள்வதன் மூலம்நோய் பரவும் என்பதாலேயே இந்த உத்தரவை பிறப்பித்துள்ளதாக நீதிமன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டியுள்ள மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் ஏன் மே தினக் கூட்டங்களை தடை செய்யுமாறு பொலிஸார் நீதிமன்றங்களை கேட்டுக்கொள்ளவில்லை என கேள்வி எழுப்பியுள்ளார்.

வெசாக்தன்சல்களை தேர்தல் பிரசார பேரணிகளையும் தடைசெய்யுமாறு பொலிஸார் நீதிமன்றங்களிடம் வேண்டுகோள் விடுப்பார்களா என கேள்வி எழுப்பியுள்ள அவர் இதன் காரணமாகவே ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைக்கும் முயற்சிகளை ஜெனீவாவில் மற்றுமொரு தீர்மானத்தை தடுப்பதற்கான ஏமாற்று நடவடிக்கை என தமிழ்மக்கள் கருதுகின்றார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் இதற்கு எதிராக குரல்கொடுப்பார்களா எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (நி-6)

## அமெரிக்க இராஜாங்க உதவிச்செயலர் டொனால்ட் லூ இலங்கை விஜயம்



(கொழும்பு)

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க இராஜாங்க உதவிச் செயலர் டொனால்ட் லூ உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று இலங்கைக்கு வருகைதந்துள்ளார்.

இந்தியா, இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள நிலையில் அவர் நேற்று இலங்கைக்கு வந்துள்ளார்

இவ்விஜயமானது இரு நாடுகளுடனான அமெரிக்காவின் தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவதையும், சுதந்திரமானதும், சுபீட்சமானதுமான இந்திய / பசுபிக் பிராந்தியத்தைக் கட்டியெழுப்புவதற்கு அமெரிக்கா வழங்கிவரும் ஆதரவை வெளிப்படுத்துவதையுமே பிரதான நோக்கமாகக் கொண்டிருக்கின்றது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)


## சாரதிகள், நடத்துநர்கள் 1000 பேருக்கு நிரந்தர நியமனம்


(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபையில் பணியாற்றும் 1,000 சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து டிப்போக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு தேவையான தகைமைகளைப் பெற்ற சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு தெரிவித்துள்ளது. 2018ஆம்ஆண்டு முதல் ஒப்பந்த அடிப்படையில் பணி புரிந்த ஊழியர்களுக்கு இவ்வாறான நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. (நி-6)

## டென்மார்க்கில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்






(கோப்பன்கேகன்)

டென்மார்க்கில் உள்ள மத வழிபாட்டு இடங்களில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

டென்மார்க் நாஸ்ட்வேட் நகரில் எழுந்தருளியுள்ள அருள்மிகு கற்பக விநாயகர் ஆலயத்தில் கடந்த சனிக்கிழமை முள்ளிவாய்க்காலில் நடந்தேறிய தமிழின அழிப்பின் மூலம், தங்கள் இன்னுயிர்களை ஈர்ந்த மக்களுக்கும் மாவீரர்களுக்குமான சிறப்பு நினைவேந்தல் வழிபாடு பொதுமக்களால் உணர்வுடன் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதில் பொதுமக்கள் தங்கள் கைகளில் நெய் விளக்கேந்தி நெஞ்சினில் மரணித்தவர்களின் நினைவை உணர்வுடன் சுமந்து தரிசித்தனர்.

அத்துடன் டென்மார்க் க்ரிண்ட்ஸ்டெட் நகர தேவாலயத்தில் முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் நேற்று முன்தினம் ஞாயிற் றுக்கிழமை டென்மார்க்கின் கிறின்சட் நகரில் உள்ள தேவாலயத்தில், 2009 முள்ளிவாய்க்கால் பேரவலத்தில் உயிர் நீத்தவர்களுக்கான விசேட நினைவேந்தலும் திருப்பலிப் பிரார்த்தனையும் மிகவும் உணர்வுபூர்வமாக மேற்கொள்ளப்பட்டது. (நி-6)





பேராசிரியர் சு.வித்தியானந்தன் நூற்றாண்டு விழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் அரங்கில் இடம்பெற்றது. அதில் நூல் வெளியீடும், காத்தவராயன் கூத்து அளிக்கையும் இடம்பெற்றன. (படங்கள்-சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.பி.எல் கொண்டாட்டம் 2024 மார்ச் - மே

# அகமதாபாத்தில் 'மழை' ஆட்டம்

- பறிபோனது குஜராத் ரைட்டன்ஸ் வாய்ப்பு
- மீதமுள்ள மூன்று இடங்களைப் பிடிக்க 6 அணிகள் மல்லுக்கட்டு




கொல்கத்தா - குஜராத் அணிகள் மோத இருந்த ஐ.பி.எல்., போட்டி மழையால் இரத்தானது.


இந்தியாவில் 17ஆவது ஐ.பி.எல்., தொடர் நடக்கிறது. இதன் லீக் சுற்று போட்டிகள் கடைசிக் கட்டத்தை எட்டியுள்ளன.

நேற்று அகமதாபாத் மோடி மைதானத்தில் கொல்கத்தா - குஜராத் அணிகள் மோத இருந்தன. இதில் வென்றால் மட்டுமே "பிளே ஓப்" வாய்ப்பை தக்கவைக்க முடியும் என்ற நிலையில் குஜராத் அணி இருந்தது.

ஆனால் மழை காரணமாக போட்டி பாதிக்கப்பட்டது. மழை நின்ற பின் மைதானத்தில் தேங்கியிருந்த நீரை அகற்றும் பணியில் தாமதம் ஏற்பட்டது. தலா 5 ஓவர் போட்டி நடக்கும் என நம்பப்பட்டது. மீண்டும் மழை வந்ததால், வேறு வழியில்லாத நிலையில் போட்டி இரத்து செய்யப்பட்டது. இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி பகிர்ந்தளிக்கப்பட்டன.

இதனால் குஜராத் அணி 13 போட்டியில் 11 புள்ளிகள் மட்டும் பெற்று, "பிளே ஓப்" வாய்ப்பை இழந் தது. கொல் கத்தா அணி ஏற்கெனவே "பிளே ஓப்" சுற்றுக்கு முன்னேறிவிட் டது.

மீதமுள்ள மூன்று இடத்தை பிடிக்க ராஜஸ்தான் (16), சென்னை (14), ஹைதராபாத் (14), பெங்களூரு (12), டில்லி (12), லக்னோ (12) என 6 அணிகள் போட்டியிடுகின்றன. மும்பை (8), பஞ்சாப் (8) அணிகள் வெளியேறி விட்டன.






**டில்லி - லக்னோ மோதல்**


இன்று நடக்கும் முக்கிய போட்டியில் டில்லி (13இல் 12 புள்ளி), லக்னோ (12இல் 12) அணிகள் மோதுகின்றன.

டில்லி (-0.482)அணி வெற்றி பெற்றால், 14 புள்ளி பெறும். ரன் ரேட் அடிப்படையில் அடுத்த சுற்று தெரியவரும்.

* மோசமான ரன்ரேட் வைத்துள்ள லக்னோ (-0.769), தோற்கும் பட்சத்தில், "பிளே ஓப்" வாய்ப்பு ஏறக்குறைய முடிவுக்கு வரும்.

* சென்னை (14 புள்ளி, 0.528) தனது கடைசி போட்டியில் (மே 18), பெங்களூருவிடம் (12, 0.387) மோசமாக தோற்காத பட்சத்தில் "பிளே ஓப்" செல்லலாம்.

# மரண அறிவித்தல்



## கணேசராசா ஞானசக்தி

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணேசராசா ஞானசக்தி அவர்கள் நேற்று (13.05.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மூத்த புதல்வியும் கணேசராசா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முருகானந்தம், சிவசுப்பிரமணியம் மற்றும் திலகவதி ஆகியோரின் சகோதரியும் ஸ்கந்தவேள் (செந்துரன்) அவர்களின் பாசமிகு தாயாரும் வயூரி அவர்களின் மாமியாரும் திருவேரகன், திஹாசினி, ஸ்ரீகரிணி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2024) செவ்வாய்க்கிழமை இல. 825, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல.825 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தகவல் : செந்தூரன் (மகன்)
தொ.பே : 077 424 2223

(749)

# 'மூன்றாவது' வரமாக வருவாரா சூர்யகுமார்

## பிரையன் லாரா எதிர்பார்ப்பு

"உலகக்கிண்ணத் தொடரில் சூர்யகுமார் மூன்றாவது வீரராக களமிறங்க வேண்டும்," என லாரா வலியுறுத்தினார்.

மே.தீவுகள், அமெரிக்காவில் "ரி20" உலக கிண்ணத் தொடர் (ஜூன் 2-29) நடக்க உள்ளது.


இதற்கான இந்திய அணியில் ஆரம்பத்தில் அணித் தலைவர் ரோகித் சர்மா - ஜெய்ஸ்வால் மிரட்டலாம். மூன்றாவது இடத்தில் ஹோலி வருவார். நான்காவது வீரராக சூர்ய குமார் (செல்லமாக சூர்யா) களமிறக்கப்படலாம். நின்று விளையாடினால், இந்திய அணி இமாலய ஓட்ட எண்ணிக்கையை எட்டுவது நிச்சயம்.

இந்திய அணியில் நான்கு "ஸ்பின்னர்"கள் உள்ளனர். இதில் சகால், குல்தீப்பிற்கு வாய்ப்பு அளிக்கலாம். இளம் வீரர்கள் சிலருக்கு வாய்ப்பு கிடைக்காமல் போனது துரதிர்ஷ்டம்.

**இறுதிப் போட்டியில் இந்தியா**

கடந்த 2007இல் மே.தீவுகளில் நடந்த உலகக்கிண்ணத் தொடரில் (50 ஓவர்) இந்திய அணி விரைவாக வெளியேறியது. இதனால் இத்தொடர் மீதான ஆர்வம் குறைந்தது. இது போன்று இம்முறை நடக்கக்கூடாது. "டி-20" உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணி சிறப்பாக செயற்பட வேண்டும். மே.தீவுகள் அணியில் திறமையான வீரர்கள் உள்ளனர். இவர்கள் ஒன்றிணைந்து விளையாடினால் உச்சம் தொடலாம்.

பைனலில் இந்தியா - மே.தீவுகள் மோத வேண்டும். இதில் சிறந்த அணி உலகக் கிண்ணம் வெல்லட்டும். இவ்வாறு லாரா கூறினார்.




**ரோகித் சர்மாவுக்கு "பிரேக்"**

அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் அணித் தலைவர் மைக்கல் கிளார்க் கூறுகையில்,

"ஐ.பி.எல்., தொடரில் ரோகித் சர்மா (மும்பை) தடுமாறுகிறார். மிகவும் சோர்வாக உள்ளார். இந்திய அணியின் தலைவரான இவர், "ரி20" உலகக் கிண்ணத் தொடருக்கு முன் சின்ன "பிரேக்" எடுக்கலாம். இதன்மூலம் மீண்டும் புத்துணர்வுடன் களமிறங்கி சாதிக்கலாம்," என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள் 01.05.2024-13.04.2025

## பணவசதிக்கு எந்தக் குறைவும் ஏற்படாது



**சனி பகவானை ராசிநாதனாகக் கொண்ட மகர ராசி அன்பர்களே!**

நீங்கள் வாதாடுவதில் வல்லவர்கள். கிரகநிலை - சுக ஸ்தானத்தில் இருந்து பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். உங்களது பாக்கிய ஸ்தானம் - லாபஸ்தானம் - ராசி ஸ்தானம் ஆகிய வற்றைப் பார்க்கிறார்.

**மேஷத்தில் இருந்து ரிஷபத்துக்கு:**

நிகழும் மங்களகரமான ஸ்வஸ்தி ஸ்ரீகுரோதி வருஷம் உத்தராயணம் வஸந்த ரிது சித்திரை மாதம் 18 ஆம் நாள் இதற்குச் சரியான ஆங்கிலத் திகதி 01.05.2024 அன்றைய தினம் கிருஷ்ணபக்ஷ அஷ்டமியும் - புதன்கிழமையும் - திருவோண நட்சத்திரமும் - சுப நாமயோகமும் - பவ கரணமும் - சித்த யோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் மாலை 5.01 இற்கு துலாம் லக்னத்தில் குரு பகவான் மேஷ ராசியிலிருந்து ரிஷப ராசிக்கு மாறுகிறார்.

**மகரம் ராசியினருக்கான குருப் பெயர்ச்சிப் பலன்கள்:**

இந்த குருப்பெயர்ச்சியில் மந்தமான நிலை மாறும். தெளிவாக திட்டமிட்டு உடனுக்குடன் செயற்படுவீர்கள். உங்களுக்குக் கீழ் பணிபுரிபவர்களுக்கு மன உற்சாகத்தையும் தைரியத்தையும் கொடுப்பீர்கள். இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக பாவிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். வசீகரமான பேச்சும் மிடுக்கான நடையும் உங்களின் தன்னம்பிக்கையைப் பறைசாற்றும். கிடைக்க வேண்டியவை தானாகவே கிடைத்துவிடும்.

வழக்கு விவகாரங்களில் உங்களுக்கு சாதகமான தீர்ப்பு கிடைக்கும். இல்லத்தில் திருமணம் போன்ற சுப காரியங்கள் நடக்கும். குழந்தைகள் பிறந்து வம்சம் விருத்தியாகும். குடும்பத்தில் உற்றார், உறவினர்கள் முழுமையான ஆதரவைத் தந்து உங்களின் கைகளை பலப்படுத்துவார்கள். அதேநேரம் எதிலும் அவசரமும் பரபரப்பும் வேண்டாம். தவறு செய்பவர்களிடம் கூட்டு சேர வேண்டாம். அவர்களிடமிருந்து சுமுகமாக விலகிவிடவும். கடினமான உழைப்புக்கு நடுவே சற்று ஓய்வெடுத்துக்கொள்ளவும். மற்றபடி முன் அறிமுகம் இல்லாதவர்களும் உங்களுக்கு உதவுவார்கள்.

பண வசதிக்கு எந்தக் குறைவும் ஏற்படாது. என்றாலும் கடினமாக உழைக்க வேண்டி வரும். சிலருக்கு அநாவசியச் செலவுகள் செய்ய நேரிடலாம். அதனால் மனச் சோர்வுக்கு ஆளாகாமால் உங்கள் வேலைகளில் கூடுதல் கவனம் செலுத்தவும். உடல் நலத்தில் அக்கறை காட்டவும். குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் ஏற்படலாம் என்பதால் கவனம் தேவை. உற்றார், உறவினர்கள் ஒன்றுமில்லாத விடயத்தைக் கூடப் பெரிதுபடுத்தி விடுவார்கள். எனவே அவர்களிடம் எச்சரிக்கை தேவை. பிள்ளைகளுக்கு சிறிது பின்னடைவு ஏற்படும். செய்தொழிலில் அகலக்கால் வைக்க வேண்டாம். மற்றபடி கோயில்களில் நடைபெறும் விசேட பூசைகளில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கும். தர்ம காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள். சகோதர சகோதரிகளிடம் ஏற்பட்ட பிணக்குகளைப் பேசித் தீர்த்துக் கொண்டு உறவுகளைப் புதுப்பித்துக்கொள்வீர்கள்.

உத்தியோகத்தர்களின் கோரிக்கைகளை மேலதிகாரிகள் சற்று காலதாமதத்துடனே பரிசீலிப்பார்கள். எனவே பொறுமையுடனும் பொறுப்புடனும் நடந்து கொள்ளவும். மற்றபடி முடிவு சாதக்மாகவே அமையும். வேலையில் திருப்தி காண்பீர்கள். வெளியூர் பயணங்களைச் செய்வீர்கள். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். இதனால் அலுவலகத்தில் உங்களின் அந்தஸ்து உயரும். வியாபாரிகளுக்கு முயற்சிகளுக்குத் தகுந்த லாபம் கிடைக்கும். நண்பர்கள் மற்றும் கூட்டாளிகளுடன் ஒற்றுமை அதிகரிக்கும். புதிய வியாபாரம் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். கொடுக்கல். வாங்கல் விடயங்கள் சீராக இருக்கும். சிறிய சிரமங்களுக்குப் பிறகே புதிய குத்தகைகள் கிடைக்கும். சிலருக்கு கால்நடைகளால் நல்ல லாபம் கிடைக்கும். பால் வியாபாரம் நன்றாக நடக்கும்.

அரசியல்வாதிகள் புதிய முயற்சிகளை செயற்படுத்துவீர்கள். மேலிடத்தின் ஆதரவு இருப்பதால் புதிய பதவிகளைப் பெற்று மகிழ்வீர்கள். உங்களின் புகழும், செல்வாக்கும் உயரும். தொண்டர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வீர்கள். கலைத்துறையினருக்கு பழைய ஒப்பந்தங்களை முடித்துக்கொடுப்பதில் சிரமங்கள் ஏற்படும். என்றாலும் கடினமாக உழைப்பீர்கள். ரசிகர்களின் ஆதரவு சிறப்பாக இருக்கும். அனைத்து விடயங்களையும் நன்றாக முடித்துவிடுவீர்கள். அதேநேரம் கடினமாக உழைக்க வேண்டி வரும். உங்களின் விடாமுயற்சியை சக கலைஞர்கள் பாராட்டுவார்கள். அவர்களால் சில வாய்ப்புகளும் கிடைக்கும்.




பெண்மணிகள் கணவரால் பாராட்டப்படுவார்கள். இதனால் குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். பிள்ளைகளால் சந்தோஷம் கிடைக்கும். அவர்களை ஆன்மீகத்தில் ஈடுபடுத்துவீர்கள். மாணவமணிகள் படிப்பில் நல்ல மதிப்பெண்களைப் பெறுவீர்கள். பெற்றோரின் ஆதரவுடன் உங்களின் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். நண்பர்கள் உதவி செய்வார்கள்.

**உத்திராடம் - 2, 3, 4 பாதங்கள்:**

இந்த குருப்பெயர்ச்சியால் பணம் கையாளும் போது கவனத்துடன் இருப்பது நன்மை தரும். எதிர்பார்த்த பணவரவு இருக்கும். குழந்தைகளின் கல்வி பற்றிய கவலை குறையும். எல்லா துன்பங்களும் நீங்கி வாழ்வில் இன்பம் உண்டாகும். மனக் குழப்பங்கள் நீங்கும். எதிர்ப்புகள் அகலும். உங்கள் பேச்சின் இனிமையால் எடுத்த காரியம் கைகூடும். சுப பலன்கள் உண்டாகும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். ஆனால் எதிலும் கூடுதல் கவனத்துடன் செயல்படுவது நல்லது. வெளியூர் பயணம் செல்ல நேரிடலாம்.

**திருவோணம்:** இந்த பெயர்ச்சியால் தொழில் வியாபாரம் திருப்தியாக நடக்கும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கலாம். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக வேலையாக அலைய வேண்டி இருக்கும்.

புதிய பொறுப்புகள் சிலருக்கு கிடைக்கலாம். குடும்பத்தில் சகஜ நிலை காணப்படும். உறவினர்கள் மூலம் நல்ல தகவல் வந்து சேரும். கணவன் மனைவிக்கிடையே இருந்த இடைவெளி குறையும். குடும்பத்தினருடன் ஆன்மீக பயணம் செல்லும் நிலை உருவாகும். மற்றவர்கள் ஆலோசனை கேட்டு உங்களை நாடி வருவார்கள்.

**அவிட்டம் - 1, 2 பாதங்கள்:**

இந்த குருப்பெயர்ச்சியால் உங்கள் குடும்பத்தை விட்டு பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வந்து சேருவார்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். கூடுதல் கவனத்துடன் செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும். எதிர்நோக்கியிருக்கும் சவால்களையும் முடிப்பீர்கள். சுவாரஸ்யமான நபர்களை சந்திக்கும் வாய்ப்புகளைப் பெறுவீர்கள். உங்கள் திறமைகளை அவர்களிடம் எடுத்துக் காட்டுவதன் மூலம் நல்ல வாய்ப்புகள் உங்களுக்குக் கிடைக்கும். பொறுப்புகள் மாறும். அதிக கவனத்துடன் பொறுப்புகளை கையாள வேண்டும். மேலிடத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரும்.

**பரிகாரம்:** ஆஞ்சநேயருக்கு வெண்ணெய் சாற்றி அர்ச்சனை செய்து வணங்க வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டாகும். மனதில் தைரியம் அதிகரிக்கும்;

**சிறப்பு பரிகாரம்:** அருகம்புல்லை அருகிலிருக்கும் விநாயகருக்கு சாத்தி வழிபடவும்;

**சொல்ல வேண்டிய மந்திரம்:** "ஓம் ஸ்ரீம்கணபதயே நம" என்ற மந்திரத்தை தினமும் 9 முறை சொல்லவும் ;

**அதிஷ்ட எண்கள்:** 2, 6, 9;

**அதிஷ்ட ஹோரைகள்:** சந்திரன், செவ்வாய், சுக்கிரன்;

**அதிஷ்ட திசைகள்:** கிழக்கு, வடக்கு

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், செவ்வாய், வெள்ளி

(தொடரும்)

# இராசிபலன்

**14.05. 2024**
**வைகாசி 01, செவ்வாய்கிழமை**
**சஷ்டி காலை 6.13 மணிவரை**

**பூசம் பிற்பகல் 4.10 மணிவரை**
**சுபநேரம் 10.23-11.53 மணிவரை**
**இராகுகாலம் 2.53-4.23 மணிவரை**

**சந்திராஷ்டமம் - அனுசம், கேட்டை**

**வளவன்**

**மேஷம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**ரிஷபம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், அரசு வழியில் அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்:** உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய நட்பில் நன்மையுண்டு, இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், பேச்சில் கனிவு பிறக்கும்.

**கடகம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், நீங்கள் பார்க்க நினைத்த நண்பர் உங்களைத் தேடி வரலாம், தொழில் நலன் கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

**சிம்மம்:** திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், ஆசைப் பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு மேலோங்கும் நாள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**துலாம்:** எதிர்பாரத பணவரவுகள் வந்து சேரலாம், பொதுவாழ்வில் புகழ் கூடும், தொழில் வளர்ச்சி கூடும் நாள், சுப காரியங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், எதிர்பார்த்த காரியமொன்று இன்று காலையிலேயே நடைபெறும் வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும்.

**தனுசு:** திட்டமிட்ட பணிகளில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், பயணத்தால் மன உழைச்சல் ஏற்படலாம், நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அர்ப்பத்தனமாக நடந்து கொள்வர்.

**மகரம்:** குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், பேச்சில் கனிவு பிறக்கும், மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம்


**கும்பம்:** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மீனம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வியாபார விருத்தியுண்டு, பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

உழைப்பை[illegible] கடவுளை மறக்காதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தாலும் நினைவில் நிற்கும் மாமனிதர்
# வைத்திய கலாநிதி அமரர் சபாரட்ணம் சிவகுமாரன்



வைத்திய கலாநிதி சிவகுமாரன் என்ற பெயரை தற்போதைய இளம் சமுதாயத்தினர் அறிந்திருக்காவிட்டாலும் எமது பிரதேச சிரேஸ்ட பிரஜைகளும் மற்றும் மருத்துவ சமூகத்தினரும் அவரை மறந்திருக்க முடியாது. 'கடவுள்' என்ற புனைபெயரால் மதிப்புடன் அழைக்கப்பட்ட மாமனிதர் இவர்.

வைத்திய கலாநிதி அமரர் சிவகுமாரன் யாழ்.மண்ணின் காரைநகரில் அமரர்கள் சபாரட்ணம்-லீலாவதி தம்பதிகளின் மகனாக 1946 இல் பிறந்தார். தனது பள்ளிப்படிப்பை யாழ். மத்திய கல்லூரியிலும், மருத்துவ பட்டப் படிப்பை கொழும்பு மருத்துவ கல்லூரியிலும் (University of Ceylon) நிறைவு செய்து மருத்துவ மேற்படிப்பிற்காக இங்கிலாந்து சென்று Royal College of Physician of London இல் Fellowship பட்டத்தை பெற்று தாய் நாடு திரும்பினார். பொது வைத்திய நிபுணராக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் ஆரம்பித்து பின்னர் மன்னார் பிராந்திய வைத்தியசாலையிலும், யாழ். போதனா வைத்தியசாலையிலும் இறுதியில் மீண்டும் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் பணியாற்றி ஓய்வுபெற்றார்.

தமது ஓய்வுக்குப்பின்னான காலத்திலும் சுறுசுறுப்பான சிரேஸ்ட மருத்துவ ஆலோசகராக சுகாதார சேவையிலும் மருத்துவ விரிவுரையாளராக SAITM தனியார் மருத்துவ கல்லூரியிலும் தனது இறுதி மூச்சுவரை பணியாற்றினார்.

இவரது வாழ்க்கைச் சரிதையை நோக்கும் போது இவர் மருத்துவ துறைக்கும் நாட்டுமக்களுக்கும் ஆற்றிய அளப்பெரிய பணியைக் கண்டுகொள்ள முடிகிறது.

குறிப்பாக யுத்த காலத்தில் யாழ்ப்பாணம் எதிர்நோக்கி இருந்த பல்வேறு சவால்களுக்கும் உயிராபத்துகளுக்கும் மத்தியில் தனது சக மருத்துவக் குழாமோடு இணைந்து முழுமூச்சாக சேவை நலம் கொண்ட வைத்திய நிபுணராகவும், கரிசனையுள்ள பராமரிப்பாளனாகவும், கண்டிப்பான நிர்வாகியாகவும், மருத்துவ மாணவர்களின் ஆசானாகவும், தன்னலமற்ற பல சேவைகளை யாழ்.மண்ணிற்கு வழங்கினார்.

வைத்திய கலாநிதி அமரர் சிவகுமாரனின் சாதாரண கடமை நாள் காலை 6.30 மணியளவில் ஆரம்பமாகும். தனக்கேயுரிய புன்முறுவலுடனும், தனித்துவமான நேரசூசியுடனும், கடமையை ஆரம்பித்து உள்ளக நோயாளர் விடுதி, வெளி நோயாளர் பிரிவுகளில் நோயாளர்களை பராமரித்தல், கல்விசார் நடவடிக்கைகள், நிர்வாக அலுவல்கள், மருத்துவ பரிசோதனைகளில் ஈடுபடுதல் என அவரது நாளாந்த சேவைகள் நீண்டு கொண்டே போகும். இதனால் அவரது வைத்திய நண்பர்கள் சிலர் சிவகுமாரன் ஐயாவின் வாகனத்தின் கீழ் வைத்தியசாலையிலுள்ள நாய்கள் குழப்பமின்றி உறங்க விரும்புகின்றன என நகைச்சுவையாகச் சொல்வதுண்டு. நோயாளரின் நலனில் இவர் காட்டும் அக்கறை, நோய் பராமரிப்புகளுக்கும் அப்பால் அவர்களது மனவளம் குடும்ப சூழ்நிலையாவற்றையும் கேட்டறிந்து ஏற்ற உதவிகளையும், வசதிகளையும், ஏற்படுத்திக் கொடுப்பதில் சக வைத்திர்களுக்கும் உத்தியோகத்தவர்களுக்கும் முன்மாதிரியாக திகழ்ந்தவர். நோயாளர் நலன் மட்டுமல்லாது தம்மோடு கடமை புரியும் சகல உத்தியோகத்தர்கள்.மருத்துவர்களின் நலன்களிலும் ஒரு குடும்ப உறுப்பினர் போல் அக்கறையுள்ளவர்.

இதற்கு எடுத்துக் காட்டாக அக்காலத்தில் மருத்துவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய மேலதிக சலுகைகள் வழங்கப்படாத போது மருத்துவசங்கத்துடன் இணைந்து அவற்றை பெற்றுக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

வைத்திய சேவை. நோயாளர் பராமரிப்பு என்ற வட்டத்திற்குள் மட்டும் நின்றுவிடாது. சிறந்த ஆளுமையும் கண்டிப்புமுடைய நல்ல நிர்வாகியாகவும் திகழ்ந்தார். 1980களில் யுத்தத்தின் போது ஏற்பட்ட மருத்துவ பற்றாக்குறை போக்குவரத்துத் தடைகள் , மட்டுப்படுத்தப்பட்ட மருத்துவ வசதிகள் யாவற்றையும் எதிர்கொண்டு வைத்தியசாலை நிர்வாகக் குழுவோடு தோள் கொடுத்து நோயளர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும், அத்தியாவசிய மருந்து வகைகளையும் . சேவைகளையும் பெற்றுக் கொடுப்பதில் பெரும் பங்கு வகித்தார். இதற்கு சான்றாக 1981 ஆம் ஆண்டில் யாழ். போதனா வைத்தியசாலையில் முதல் முறையாக அதி தீவிர சிகிச்சைப்பிரிவு இவரினதும் இவரைப்போன்ற அர்ப்பணிப்புள்ள எமது மருத்துவர்களினதும் முயற்சியின் பலனாக உருவாக்கப்பட்டது என்பதை யாழ்.சமூகம் என்றும் மறக்கமுடியாது. இதற்குரிய நிதியை அரசாங்கத்திலிருந்து மட்டுமே தங்கியிராது தனிப்பட்ட முறையில் பல சிரமங்களுக்கும் மத்தியில் திரட்டி ஒரு முழுமையாக செயற்படக்கூடிய அதி தீவிர சிகிச்சைப் பிரிவை நிறுவினார். மேலும் Endoscopy, Hemo dialysis, Echo cardiogram, Ultra sound scan ஆகிய பரிசோதனை வசதிகள் யாழ். போதனா வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னின்று முயற்சித்தவர்களில் இவரும் ஒருவர். இப்பரிசோதனைகளைச் செய்வதற்குரிய விசேட பயிற்றுவிக்கப்பட்ட நிபுணர்கள் இல்லாத காலங்களில் அமரர் சிவகுமாரனும் மற்றைய சிரேஸ்ட வைத்திய நிபுணர்களும் இப் பரிசோதனைகளை மேற்கொண்டு அளப்பெரிய சேவையை மக்களுக்கு வழங்கினார்கள். 1990களில் யாழ்ப்பாணத்தின் யுத்த நெருக்கடியான காலப்பகுதியில் பொது மக்களின் பாதுகாப்புக் கருதி யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தை செஞ்சிலுவைச்சங்கத்தின் (ICRC) உதவியுடன் பாதுகாப்பு வலையமாக்கி வைத்திய சேவைகளை வழங்கியது மட்டுமல்லாது, போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணத்தில் இயங்கமுடியாத போர் சூழ்நிலையில் சம்மந்தப்பட்ட அமைப்புக்களுடன் கலந்தாலோசித்து வைத்தியசாலையை மானிப்பாய்க்கு இடமாற்றம் செய்து தொடர்ச்சியான சேவையை வழங்கவும் வழிவகுத்தார்.

இவரது நிர்வாகப்பணி வைத்தியசாலைகளையும் தாண்டி சுகாதார திணைக்களத்திலும் தொடர்ந்தது. தனது ஓய்வுக்குப்பின்னர் சுகாதார திணைக்களத்தில் மருத்துவ சேவைகள் ஆலோசகராக இணைந்து எமது நாட்டின் சுகாதார சேவையிலுள்ள குறைபாடுகளையும். மருத்துவர் பற்றாக் குறைகளையும். ஈடு செய்வதற்காக பல செயற்றிட்டங்களை பரிந்துரைத்தார். அவற்றில் ஒன்றாக ஒவ்வொரு மருத்துவ விடுதியிலும் இரு மருத்துவ நிபுணர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதும் இவரது முன்மொழிவாகும்.

வைத்திய கலாநிதி அமரர் சிவகுமாரன் தனது வைத்திய சேவையைப் போன்றே கற்பித்தல் நடவடிக்கைகளையும் தனது தலையாய கடமையாகக் கருதினார்.

தனது வேலைப் பழுவையும். நேரத்தையும் கருத்திற் கொள்ளாது மருத்துவ பீட மாணவர்களுக்கும். மருத்துவ மேற்படிப்பு பயிற்சி மருத்துவர்களுக்கும் (Post Graduate trainee). கற்பித்தல் நடவடிக்கைகளை மிகவும் கிரமமாக மேற்கொள்வார். யாழ்.மருத்துவ பீடத்தில் மருந்தியல் கற்கை நெறிகளில் இவரது பங்கு குறிப்பிடத்தக்கது. கற்பித்தலில் அவருக்கிருந்த அதீத ஆர்வத்தினால் தனது சுகாதாரத் துறையின் ஓய்வுக்குப்பின்னர் SAITM என்ற தனியார் மருத்துவ பீடத்தில் விரிவுரையாளராக இணைந்து கற்பித்தலை தொடர்ந்தார். அத்தோடு மாலபேயில் அமைந்துள்ள Neville Fernando பயிற்சி மருத்துவமனையிலும் பணியாற்றி மாணவர்களின் பயிற்சி கற்கைகளை வலுவூட்டினார். கற்பித்தலில் இவருககிருந்த அக்கறையை அவரது மறைவிற்கு முந்திய நாளில் அவர் பெற்றுச்சென்ற மருத்துவ மாணவர்களின் விடைத்தாள்கள் அனைத்தும் முழுமையாக திருத்தி முடிக்கப்பட்டிருந்ததன் மூலம் புலப்படுகின்றது. வைத்திய கலாநிதி சிவகுமாரன் அவர்கள் தன்னுடன் பயிற்சி பெறும் வைத்திய மாணவர்களுக்கு முன்மாதிரியான தந்தையாகவும் , கண்டிப்பான ஆசானாகவும் இருந்து அவர்களது கற்கை நெறிகளையும், பயிற்சிகளையும் மிகவும் கவனத்துடன் கண்காணிப்பார். தன்னுடன் பயிற்சியிலுள்ள அனைத்து மருத்துவர்களையும் மரியாதையுடன் பெயர் சொல்லி அழைப்பது அவரது தனிச்சிறப்பு. சிகிச்சைகளை தெரிவு செய்யும் முறை, மருந்துகளை பரிந்துரைக்கும் விதம், நோயாளிகளின் தேவைக்கேற்பவும் நாட்டின் பொருளாதார, மருத்துவ கொள்கைகளுக்கும் ஏற்ற விதத்தில் சிகிச்சைகளை வழங்குவதை மிகவும் சிரத்தையுடன் பயிற்றுவிப்பார்.

பயிற்சி மாணவர்களின் பிழைகளைச் சுட்டிக்காட்டி கண்டித்து வழிகாட்டும் அதேவேளையில் அவர்கள் செய்யும் திறமையான காரியங்களையும் கவனித்து பாராட்டி தட்டிக் கொடுப்பதில் அவருக்கு நிகர் அவரே தான். கடமைகளுக்கும், சேவைகளிற்க்கும் அப்பால் வைத்திய கலாநிதி அமரர் சிவகுமாரன் கடவுள் பக்தியும், மனித நேயமும், தன்னலமற்ற நற்பண்புகளுமுடைய நல்ல மனிதராகவும் வாழ்ந்தார். அனைவரையும் பாகுபாடின்றி சமமாக மதித்து நடத்துவது இவரது பெருந்தன்மை. 1987 இல் யாழ். போதனா வைத்தியசாலையில் ஏற்பட்ட பாரிய அனர்த்தத்தினால் சேவை நேரத்தில் உயிரிழந்த வைத்தியர்கள், தாதியர், மற்றும் ஊழியர்களின் குடும்பங்களுக்கு அவர்களின் மறைவிற்கு பின்னர் ஓய்வுதியம் வழங்கப்படுவதற்கு சகல முயற்சிகளையும் செய்து அவற்றை பெற்றுக்கொடுப்பதில் வெற்றியும் கண்டார். இவரது தன்னலமற்ற சேவைகளை கௌரவிக்கும் வகையில் அகில இலங்கை கம்பன் கழகம் 1993 ஆண்டில் இவருக்கு "மகர யாழ்" எனும் விருதை வழங்கி கௌரவித்தது.

அமரர் சிவகுமாரன் பற்றிய இரங்கல் குறிப்பில் அவரது நெருங்கிய நண்பர் ஒருவர் இவரை ஒரு "தத்துவஞானி வைத்திய நிபுணர்" என குறிப்பிட்டு. அவரது வாழ்க்கையை ஒரு வில்லில் இருந்து இலக்கை நோக்கி புறப்படும் ஓர் அம்பிற்க்கு ஒப்பிட்டுள்ளார். இவ் அம்பு எவ்வாறு ஒரு நேர்கோட்டில் காற்றைக் கிழித்துக் கொண்டு பயணித்து தன்னிலக்கை அடையுமோ அவ்வாறே கலாநிதி அமரர் சிவகுமாரன் அவர்களும் தனது வாழ்க்கை இலக்கை முழுமையாக அடைந்து இறைபதம் அடைந்து விட்டார். இவரது எல்லா முயற்சிகளையும் தனக்கே யுரிய புன்முறுவலோடு செய்துமுடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வ த்துள் வைக்கப்படும்"**

தனது தகமைகளுக்கும் தகுதிகளுக்கும் மேலாக வைத்திய கலாநிதி அமரர் சிவகுமாரன் அவர்கள் தான் ஒரு சாதாரண மனிதன் என்பதில் வைராக்கியமாக வாழ்ந்தவர். இவ்வுலகில் மனிதானாக பிறக்கும் எவரும் தமது கொள்கைகளினாலும் கட்டுகோப்பான வாழ்க்கை முறைகளாலும் ஒரு அர்த்தமுள்ள முழுமையான வாழ்க்கை வாழ முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டினார் என்றால் அது மிகையாகது.

இவருடைய வாழ்க்கைப் பணிகளையும் சேவைகளையும் இம் முதலாம் ஆண்டில் நினைவு கூருகிறோம்.

**யாழ் மருத்துவ சங்கம்**





வரலாற்று சிறப்பு மிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த மகோற்சவப் பெருந்திருவிழாக் கொடியேற்றம் நேற்று பக்தி பூர்வமாக இடம்பெற்றது.
(படங்கள் - ஜோசப்நயன்)



யாழ்.கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி ஸ்ரீசிவகாமி அம்பாள் கொடியேற்றம் நேற்று பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்-சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுபோக செய்கைக்கான புலவுகளை திறக்கக் கோரி மன்னாரில் ஆர்ப்பாட்டம்

**(மன்னார்)—— மன்னார் மாவட்ட சிறுபோக நெற் செய்கைக்கான புலவுகளை தெரிவு செய்வதில் அதிகாரிகளின் தனிப்பட்ட பழிவாங்கல்களை கண்டித்து நேற்று திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் கண்டன ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.**



2024 ஆம் ஆண்டுக்கான சிறுபோக செய்கைக்காக நெடுங்கண்டல் புலவை திறந்து தருமாறுகோரி மாந்தை மேற்கு விவசாயிகள் குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் மன்னார் மாவட்டச் செயலகத்தின் நுழைவாயிலை முற்றுகையிட்டு, அதிகாரிகளின் தனிப்பட்ட பழிவாங்கல்களுக்கு இடம் கொடுக்காதீர்கள், திறந்து விடு திறந்து விடு நெடுங்கண்டல் புலவை திறந்து விடு, கொல்லாதே கொல்லாதே விவசாயிகளை கொள்ளாதே உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2024 ஆம் ஆண்டுக்கான சிறுபோக செய்கைக்காக நெடுங்கண்டல் புலவை திறந்து தருமாறு விவசாயிகள் சார்பாக கோரிக்கை முன்வைக்கின்றோம் என போராட்டத்தில் ஈடுபட்ட மாந்தை மேற்கு விவசாயிகள் தெரிவித்தனர்.

மேலும் தமது கோரிக்கை அடங்கிய மகஜர் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது. (நி-6-285)


**லங்கா மஹால் (PVT) LTD**

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : 0091956156719

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, 077 839 3974

(கி-0354)


## பெயர் மாற்ற அறிவித்தல்

212, கோவில் வீதி, நல்லூர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பற்றிக் குலநாயகம் யோசவ் றிச்மன் குலநாயகம் ஆகிய நான் 14.05.2024 இன்று முதல் எனது பெயரை பற்றிக் குலநாயகம் யோசவ் றிச்மன் எனப் பெயர் மாற்றம் செய்கின்றேன். இனிவரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் மேற்குறித்த பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

**உண்மையுள்ள**

**பற்றிக்குலநாயகம் யோசவ் றிச்மன்**

(743)

## தென்.கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) கொடிகாமம்
## கேள்வி அறிவித்தல்
### கடை வாடகைக்கு விடுதல்

எமது சங்கத்திற்கு சொந்தமான கொடிகாமம் பஸ் தரிப்பிடத்திற்கு வடக்காக கிராமிய வங்கிக்கு அருகாமையில் உள்ள கடைக் கட்டடம் ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு விடுவதற்கான கேள்வி கோரப்படுகின்றது

| | |
|---|---|
| ஆகக் குறைந்த மாதாந்த வாடகை :- | ரூபா 40000.00 |
| முற்பணம் :- | ரூபா 500000.00 |
| ஒப்பந்த காலம் :- | 03 வருடங்கள் |

மேலே குறிப்பிடப்பட்ட மாதாந்த வாடகை தொகைக்கு மேலதிகமாக விண்ணப்பிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பிப்பவர்கள் 29.05.2024 திகதிக்கு முன்னர் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக ரூபா 1000.00 கணக்கு இல 11010010000097 செலுத்தி பற்றுச்சீட்டை இணைத்து மூடப்பட்ட தபாலில் விண்ணப்பம் செய்யவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:-

**தலைவர், தென்மராட்சி கிழக்கு பல.நோ.கூ.சங்கம், பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.**

குறிப்பு:- கேள்வி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் போது தங்களால் மேற்கொள்ளப்படும் உத்தேச தொழில்/சேவையின் தன்மையினை தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நெறியாளர் குழுவின் தீர்ப்பே இறுதியானது

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
### ஐயனார் கோயில் வீதி, வட்டாரம் - 02

வலிகாமம் மேற்கு பிரதேசசபை, அராலி உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 02 ஐயனார் கோயில் வீதியிலுள்ள ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டில் இதுவரை பதிவு செய்யப்படவில்லை.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தின் ஓர் பகுதியினை நல்லதம்பி அப்புத்துரையும் பெண் இரத்தினமும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு ச.வை.சோமசுந்தரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6152/01.07.1963ம் இலக்க உறுதியால் சதாசிவம் வயிரமுத்துப் பிள்ளை ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது 1963.06.01 ஆம் திகதி சமாதான நீதவான் T.வினாயகமூர்த்தி முகதாவில் சத்தியம் செய்ததன் பிரகாரம் என குறிப்பிட்டே குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டிருந்தது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தின் ஓர் பகுதியினை நாகலிங்கம் வைடூரியமும், நாகலிங்கம் இராசனும் ஆகியவர்கள் தமக்குள் இணங்கி சம்மதித்து ஒருவருக்கொருவர் காணிகளை மாற்றி பிரசித்த நொத்தாரிசு ச.வ சோமசுந்தரம் முகதாவில் 5750/05.08.1962 ஆம் இலக்கத்தில் காணிமாற்றல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்கள். நல்லதம்பி அப்புத்துரை பெண் இரத்தினம் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ச.வை.சோமசுந்தரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6255/06.10.1963 ஆம் இலக்க உறுதியால் குறித்த நாகலிங்கம் இராசன் ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

சின்னத்தம்பி முருகையா பெண் செல்வதி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ச.வை சோமசுந்தரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 7816/03.10.1960ஆம் இலக்க உறுதியால் குறித்த நல்லதம்பி அப்புத்துரையும் பெண் இரத்தினமும் ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனங்களினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தின் ஓர் பகுதியினை நல்லதம்பி அப்புத்துரையும் பெண் இரத்தினமும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு ச.வை சோமசுந்தரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5881/03.11.1962ஆம் இலக்க உறுதியால் நாகலிங்கம் அருணாசலம் ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது 1962.10.30 ஆம் திகதி சமாதான நீதவான் T.வினாயகமூர்த்தி முகதாவில் சத்தியம் செய்ததன் பிரகாரம் என குறிப்பிட்டே குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டுள்ளது

அப்புத்துரை வீரசிங்கம் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வ.பரமானந்தம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 609/06.09.1972 ஆம் இலக்க உறுதியால் நல்லதம்பி அப்புத்துரையும், அப்புத்துரை துரைசிங்கமும், அப்புத்துரை மகள் தேவிஅம்மாவும் ஆகியவர்களிடமிருந்து மேற்படி முழு ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

நாகலிங்கம் காசிப்பிள்ளை ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு அ.சண்முகநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 571/15.07.1981 ஆம் இலக்க உறுதியால் குறித்த அப்புத்துரை வீரசிங்கம் ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

சுபாபதி சந்திரமனோகரன் பெண் நிர்மலாதேவி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு க.மு.தர்மராசா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1759/31.08.1984 ஆம் இலக்க உறுதியால் குறித்த நாகலிங்கம் காசிப்பிள்ளையும் பெண் ஆனந்தமனோகரியும் ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

இராஜகுலசிங்கம் பெண் செல்வராணி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு அ.சண்முகநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 896/23.08.2002 ஆம் இலக்க உறுதியால் குறித்த சுபாபதி சந்திரமனோகரன் பெண் நிர்மலாதேவி ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

சுப்பன் ஆறுமுகம் மகள் கனகம்மா ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு தே.மு கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 7300/28.08.2005 ஆம் இலக்க உறுதியால் குறித்த இராசகுலசிங்கமும் பெண் செல்வராணியும் ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். சிதம்பரப்பிள்ளை சிவணேஸ்வரன் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ப.திலக்ஷனா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 191/02.03.2019ஆம் இலக்க உறுதியால் குறித்த சிதம்பரப்பிள்ளை பெண் கனகம்மா முன்னர் ஆறுமுகம் மகள் கனகம்மா ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

சிவணேஸ்வரன் பெண் சசிகலா ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ப.திலக்ஷனா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 989/03.03.2021 ஆம் இலக்க உறுதியால் குறித்த சிதம்பரப்பிள்ளை சிவணேஸ்வரன் ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

சிவணேஸ்வரன் பெண் சசிகலா ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சிவணேஸ்வரன் பெண் சசிகலா ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர்**

**வலிகாமம் மேற்கு பிரதேசசபை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## தடைகளை தாண்டி திருமணம் செய்யும் மூன்று அடி உயர பாடகர் அபுரோசிக்



(தஜிகிஸ்தான்)

தஜிகிஸ்தான் நாட்டை சேர்ந்தவர் அபுரோசிக். 20 வயதாகும் இவர் 3 அடி உயரம் கொண்டவர்.

சமூக வலைதளங்களில் பிரபலமான இவர் பாடகராகவும் திகழ்கிறார்.

இந்தியில் சல்மான்கான் தொகுத்து வழங்கும் பிக்பாஸ் நிகழ்ச்சியில் 16 ஆவது சீசனில் போட்டியாளராக பங்கேற்ற இவர் சல்மான் கான், ஏ.ஆர்.ரஹ்மான், டோனி என பிரபலங்களுடன் நட்பாக பழகி அவர்களுடன் எடுத்த புகைப்படம் சமூக வலைதளங்களில் வைரலாகி இருந்தது.

தடைகளை எல்லாம் தகர்த்து எப்போதும் சிரித்த முகத்துடனும், தன்னம்பிக்கையுடனும் வலம் வரும் இவர் தற்போது தஜிகிஸ்தான் நாட்டை சேர்ந்த பாடகி அமிரா என்பவரை திருமணம் செய்ய உள்ளார்.

சமீபத்தில் இவர்களுக்கு நிச்சயதார்த்தம் முடிந்த நிலையில் ஜூலை 7 ஆம் திகதி திருமணம் நடைபெற உள்ளதாக தெரிவித்தார். அவர் அமிராவுக்கு இதய வடிவிலான வைர மோதிரத்தை நிச்சயதார்த்தின் போது அணிவித்துள்ளார்.

அந்த புகைப்படத்தை சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ளார். அதை பார்த்த பிரபலங்கள் மற்றும் நெட்டிசன்கள் பலரும் அவருக்கு வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர். (நி-6)

# காசாவில் போர் நி

# வலியுறுத்து

**(ஜெனீவா)**

## காசாவில் 'மனிதாபிமான நிறுத்தம்' தேவை என ஐ.ந பொதுச்செயலாளர் அன்டன குட்டரெஸ் வலியுறுத்தியுள்ளார்

குவைத்தில் அண்மையில் இடம்பெற்ற சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது "காசாவில் உடனடியாக மனிதாபிமான போர்நிறுத்தம் தேவை. அனைத்து பணயக் கைதிகளையும் நிபந்தனை

## பாகிஸ்தானில் வன்முறை ஒருவர் உயிரிழப்பு-100 பேர் படுகாயம்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் கடந்த சில மாதங்களாக கடும் பொருளாதார நெருக்கடி நிலவுகிறது. இதனால் பணவீக்கம் ஏற்பட்டு அத்தியாவசிய பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளது.

இந்தநிலையில் விலை உயர்வை கண்டித்தும், மேல்தட்டு மக்களுக்கு வழங்கும் சலுகைகளை ரத்து செய்யக் கோரியும் அரசாங்கத்துக்கு எதிராக பொது மக்கள் போராட்டத்தில் குதித்தனர்.

அதன்படி தகவலறிந்த பொலிஸார் போராட்டத்தை கைவிடும்படி வலியுறுத்தினார். அப்போது போராட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வன்முறையில் பொதுமக்கள் தாக்கியதால் பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் 78 பொலிஸார் உட்பட 100 பேர் படுகாயம் அடைந்தனர்.

மேலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அந்த பகுதியில் ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டு உள்ளனர்.

இதற்கிடையே நிலவும் அசாதாரண சூழ்நிலையை சமாளிப்பது தொடர்பான அவசர கூட்டத்துக்கு ஜானாதிபதி ஆசிப் ஆலி சர்தாரி அழைப்பு விடுத்துள்ளார். (நி-6)

## காசாவில் இ கடும் போருக்கு

(காசா)


காசாவில் ரஃபா நகரை குறி வைத்து மிகக் கடுமையான தாக்குதலை நடத்தி வரும் இஸ்ரேல் ராணுவம் அந்நகரில் பாதிக்கப்பட்டு வெளியேறும் மக்களுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்வதற்காக அங்கு மருத்துவமனை ஒன்றைத் திறந்துள்ளது.

தாக்குதலில் சேதம் அடைந்துள்ள காசா இஸ்ரேல் மற்றும் காசாவின் ஹமாஸ் அமைப்புக்கு இடையே கடந்த 7 மாதங்களுக்கு முன் தொடங்கிய போர் இதுவரையிலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதில் காசா தரப்பில் இதுவரை சுமார் 34,900 பேர் பலியாகி உள்ளனர்.

அங்குள்ள அனைத்து நகரங்களும் அழிக்கப்பட்டுள்ளன. பல்லாயிரம் கோடி மதிப்பிலான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டுள்ளன. இஸ்ரேல் தரப்புக்கும் சேதம் அதிகம் தான்.

இதற்கிடையே போரை நிறுத்துவது குறித்து பல்வேறு நாடுகளும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. இந்நிலையில் போர் நிறுத்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த இஸ்ரேலுக்கு அமெரிக்கா அழைப்பு விடுத்திருந்தது.

ஆனால் சமீபத்தில் இஸ்ரேல் மீது காசா நடத்திய தாக்குதலில் 4 ராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். இதனையடுத்து அமெரிக்காவின்



## கொவிட் வைரஸை கட்டுப்படு உலகம் முழுவதும் சு

(வோஷிங்டன்)

கொவிட் வைரஸை கட்டுப்படுத்த பெறப்பட்ட தடுப் பூசிகளால் உலகம் முழு வதும் 11,000 இற்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர்.

2023 இல் ஐரோப்பிய மருந்துகள் முகமை வெளியிட்ட அறிக்கையை மேற்கோள்காட்டி வார இறுதியில் வெளியிடப்பட்ட அறிக்கை இதைத் தெரிவித்துள்ளது.

பைசர் தடுப்பூசி போட்ட 8,000 பேரும் அஸ்ட்ரா ஜெனிகா தடுப்பூசியைப் பெற்ற 1,500 பேரும் உயிரிழந்துள்ளனர்.

ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ரா ஜெனிகா கொவிட் தடுப்பூசி சமீபத்தில் அதே நிறுவனத்தால் பயன்பாட்டிலிருந்து திரும்பப் பெறப்பட்டது. மூன்று பில்லியனுக்கும் அதிகமான டோஸ்கள் வழங்கப்பட்ட பிறகு தான் இது மீளப்பெறப்பட்டது.

இந்த முடிவால் உலகம் முழுவதும் இது தொடர்பான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுத்தம் தேவை
# கிறது ஐ.நா

## ன போர்
## ஐ.நாவின்
## டனியோ
## ளார்.



யின்றி விடுவிக்க வேண்டும்.

மனிதாபிமான உதவிகளில் உட னடி எழுச்சிக்கான எனது அழைப்பு மற்றும் உலகின் அழைப்பை நான் மீண்டும் வலியுறுத் துகிறேன். போர் நிறுத்தம் ஒரு நல்ல தொடக்கமாக இருக்கும். இந்தப் போரின் பேரழிவுகள் மற்றும் அதிர்ச் சியில் இருந்து மீள்வதற்கு நீண்ட காலங்கள் தேவைப் படும்" இவ்வாறு அன்ட னியோ குட்டரெஸ் தெரி வித்துள்ளார். (நி-6)

# ல் இன்னொரு மருத்துவமனை
## க்கு நடுவில் இஸ்ரேல் மனிதாபிமானம்



பேச்சுவார்த்தை அழைப்பினை இஸ்ரேல் நிராகரித்தது.

மேலும் காசாவின் ரஃபா நக ரில் வசிக்கும் பொதுமக்கள் அனைவரும் வெளியேறும்படி இஸ்ரேல் அறிவுறுத்தியது. பின்னர் அங்கு தனது ராணு வத்தை களமிறக்கிய இஸ்ரேல் அங்கு தற்போது கடும் தாக்கு தலை நடத்தி வருகிறது. இந்த நிலையில் காசாவின் மையப் பகுதியான டெய்ர் அல்-பலாஹ் நகரில் இஸ்ரேல் ஒரு மருத்து வமனையை உருவாக்கி வரு கிறது. இது ரஃபா நகரில் இரு ந்து வெளியேறும் பொதுமக்க ளுக்கு மனிதாபிமான உதவி களை வழங்குவதற்காக அமை க்கப்படுகிறது.

காசா மீது போர் தொடங்கி யதில் இருந்து தேவையான பகுதிகளில் மருத்துவமனை களை இஸ்ரேலால் உருவாக்கி வருகிறது. அதன்படி இஸ்ரே லால் உருவாக்கப்படும் 8 ஆவது மருத்துவமனை இது வாகும். கடும் போர்ச் சூழலிலும் மக்களை காக்க மனிதாபிமான முறையில் மருத்துவமனை களைத் திறக்கும் இஸ்ரேலில் செயலுக்கு செஞ்சிலுவை சங் கம் உள்ளிட்ட சேவை அமைப் புகள் வரவேற்பு தெரிவித்துள் ளன. (நி-6)

## ப்படுத்த பெறப்பட்ட தடுப்பூசிகளால்
## ம் சுமார் 11,000 பேர் பலி

டிலிருந்து து. மூன்று அதிகமான ப்பட்ட பிறகு ப்பட்டது. உலகம் தொடர்பான விவாதம் உருவாகி யுள்ளது. அதே நேரத்தில், மற்ற கொவிட் தடுப்பூசிக ளுக்கும் எதிர்ப்பு எழுந்துள் ளது.

இருப்பினும், சில நிபுணர் கள் அஸ்ட்ராஜெனிகா தடுப் பூசி சிறந்தது என்று கருத்து தெரிவித்துள்ளனர்.

அஸ்ட்ராஜெனிகா தடுப் பூசியை உட்கொண்டதன் பின னர் உடலில் இரத்தம் உறை ந்து இறந்ததாக 81 குற்றச் சாட்டுகள் மட்டுமே பதிவு செய் யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அதற்கு ஆதரவான அறி ஞர்கள் இந்த தடுப்பூசி மில் லியன் கணக்கான உயிர் களைக் காப்பாற்றியுள்ளது என்று சுட்டிக்காட்டுகின்ற னர்.

ஏனைய தடுப்பூசிகளினால் பாதிக்கப்பட்டவர்களின் எண் ணிக்கை இதனை விட அதிகம் எனவும் அவர்கள் குறிப்பிட் டுள்ளதாக வெளிநாட்டு ஊட கங்கள் செய்தி வெளியிட் டுள்ளன. (நி-6)

## இந்தோனேசியாவில் வெள்ளப்பெருக்கு
# 37 பேர் உயிரிழப்பு





(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் மேற்குப் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக 37 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் 16 பேர் காணா மல் போயுள்ளதாக வெளி நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன் காரணமாக 84 வீடுகள், 16 பாலங்கள் மற் றும் இரண்டு வழிபாட்டுத் தலங்கள் சேதமடைந்துள் ளதுடன் 90 பேர் இடம் பெயர்வு முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்

இதேவேளை கடந்த மார்ச் மாதம் மேற்கு சுமத்தி ராவை பாதித்த வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி 26 பேர் உயிரிழந்திருந் தமை குறிப்பிடத்தக்கது.(நி-6)

## ஐ.நாவின் தடையை முற்றாக புறக்கணித்த வடகொரியா



(பியாங்யாங்)

கொரிய தீபகறபத்தில் வடகொரியாவானது தொடர் ஏவுகணை மற்றும் அணு ஆயுத சோதனை மேற் கொண்டு வருகிறது.

நீண்ட தூர ஏவுகணை சோதனை நடவடிக்கை களை மேற்கொள்ள ஐ.நா விதித்துள்ள தடைகளையும் மீறி வடகொரிய இவ்வாறு செய்து வருகிறது.

அத்தோடு, வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் பியாங்யாங்கில் உள்ள இராணுவ தளமொன்றிற்கு விஜயம் மேற்கொண்டு ஆய்வுகளை நடத்தியுள் ளார்.

இதன் போது அந்நாட்டு இராணுவம் புதிய மல்டிபிள் ரொக்கெட் சோதனையை நடத்தியுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

இந்த நிலையில், வடகொ ரியா தங்கள் நாட்டை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தும் விதமாக சோத னைகளை மேற்கொண்டு வருவதாக தென்கொரியா குற்றஞ்சாட்டியுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித பாவனைக்குத் தகுதியற்ற அரிசிப்பொதிகள் மீட்பு

(கொழும்பு)

ஒரு இலட்சத்து எழுபதாயிரம் கிலோகிராம் அரிசி மனித பாவனைக்குத் தகுதியற்றதாக நுகர்வோர் விவகார அதிகார சபை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

நுகர்வோர் அதிகார சபையின் அனுராதபுரம் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய நேற்று முன்தினம் இந்த சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி ஒரு இலட்சத்து எழுபதாயிரம் கிலோகிராம் அரிசியை 8 லொறிகள் மூலம் தனியார் அரிசி ஆலைக்கு கொண்டு சென்று மீண்டும் பொதி செய்து கொண்டிருந்த போதே இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரிசியின் பொதிகளில் எழுதப்பட்ட திகதி கடந்த 30ஆம் திகதி காலாவதியாகியிருந்த நிலையில் காலாவதித் திகதி அடுத்த 30 நாட்களுக்கு செல்லுபடியாகும் வகையில் மாற்றியமைக்கப்பட்டது.

அத்துடன் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான இலவச அரிசி வழங்கும் திட்டத்திற்கு இந்த அரிசியை அரசாங்கம் பயன்படுத்த திட்டமிட்டுள்ளதாக முதற் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

மேலும் நுகர்வோர் அதிகார சபையினால் கையகப்படுத்தப்பட்ட அரிசி கையிருப்பு சீல் வைக்கப்பட்டுள்ளதுடன், அரிசி ஆலையின் உரிமையாளரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(நி-6)

# மின்னல் தாக்குதலுக்கு உள்ளான சபுகஸ்கந்த

(கொழும்பு)

சபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தின் மீது மின்னல் தாக்கியுள்ளதை அடுத்து, தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தில் புகையை வெளியேற்றும் எரிவாயு குழாய் மீதே மின்னல் தாக்கியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது.

எவ்வாறாயினும் தீ உடனடியாக கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

அத்துடன் மின்னல் தாக்கம் காரணமாக எவருக்கும் எந்த வித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 160 | 150 | 100-150 | 200 |
| உருளைக்கிழங்கு | 160 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 80 | 60-80 | 120 |
| தக்காளி | 160 | 180 | 130 | 120-160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 140 | 100-130 | 180 |
| கோவா | 180 | 200 | 150 | 170 | 200 |
| கரட் | 350 | 240 | 220 | 200 | 280 |
| பூசணி | 80 | 80 | 80 | 80-100 | 80 |
| புடோல் | 80 | 180 | 130 | 80 | 200 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 70-80 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 200-350 | 320 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 220 | 200 | 200 |
| பாகற்காய் | 300 | 400 | 400 | 300 | 400 |
| வெண்டக்காய் | 100 | 300 | 130 | 170 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | -- | 200 |
| பயற்றங்காய் | 450 | 600 | 400 | 500 | 400 |
| லீக்ஸ் | 320 | 260 | 280 | 250 | 350 |
| பீற்றூட் | 200 | 250 | 400 | 300 | 400 |
| கறிமிளகாய் | 250 | 200 | 200 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 450 | 300-600 | 600 |
| போஞ்சி | 300 | 400 | 400 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 150 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 40-60 | 100 |
| தேசிக்காய் | 1200 | 1200 | 1200 | 1000-1350 | 1600 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 100 | 50-100 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 400 | 250 | 400 |
| வெங்காயப்பூ | 600 | 500 | 250 | -- | -- |
| முள்ளங்கி | 140 | 100 | 150 | 80 | 280 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 35 | 80 | 100 | 80 |
| ஈரப்பலா | -- | -- | 100 | 80 | -- |

# இன்று ஒரு தகவல்

123



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## நீதியில் தாமதம்

ஒரு வழக்கிலே தாமதமாக தீர்ப்பு வழங்குவது நீதியையே மறுப்பதற்கு சமம் என்று குடியரசுத்தலைவர் சொல்லியிருக்கிறார்!

அதிகம் சிந்திக்க வேண்டிய ஒரு கருத்து இது. இந்தப் பிரச்சினை நம் நாட்டில் மட்டும் இல்லை இருந்தாலும் இதற்கு ஒரு தீர்வு காண வேண்டியது அவசியம் என்றும் அவர் சொல்லியிருக்கிறார். ஆமாம்! எல்லா இடத்திலேயும் இந்தப் பிரச்சினை உண்டு.

இஸ்ரேலிலே இபிரைம் கிஷான் என்று ஒருவர். இவர் பல புத்தகங்களை எழுதியிருக்கிறார். நாடகம் எழுதியிருக்கிறார். பத்திரிகைகளிலே வேடிக்கையாக எழுதுவார். இஸ்ரேல் உடைய தேசிய நகைச்சுவையாளர் என்ற பெயர் இவருக்கு. அவருக்கு ஏற்பட்ட அனுபவம் ஒன்றை வேடிக்கையாக சொல்லியிருக்கிறார். 10 வருடத்திற்கு முன்பு அவரிடம் ஒருவர் கடன் வாங்கினாராம். எவ்வளவு? 20 பவுண்ஸ். அதாவது அவர்கள் நாட்டு நாணயம். வாங்கியவர் என்ன சொல்லி வாங்கினார்? இன்னும் ஓரிரு மணி நேரத்தில் திருப்பி கொடுத்து விடுகிறேன் என்று சொல்லி வாங்கினார். இல்லை என்றால் கூட எப்படியும் ஒரு நாளுக்குள்ளே இந்தப் பணம் மறுபடியும் உங்கள் கையில் இருக்கும் என்று உறுதியாகச் சொன்னார்.

சொன்னதுடன் சரி அவர் கொடுக்கவில்லை. இவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இருக்கிறார். அவர் ஒரு வாரம் தவணை தாருங்கள் கொடுத்து விடுகிறேன் என்றார். ஒரு வாரம் கழித்து இவர் போய் கேட்டு இருக்கிறார். வருகின்ற திங்கட்கிழமை மத்தியானம் உறுதியாக கொடுத்து விடுகிறேன் என்றார். திங்கட்கிழமை போய்விட்டது. செவ்வாய்க் கிழமையும் போய் விட்டது. புதன்கிழமையும் போய் விட்டது. வியாழக்கிழமை மாலை நேரம் இவர் ஒரு சட்ட ஆலோசகரைப் போய் பார்த்திருக்கார். அவர் இதை கேட்டுவிட்டு கடன் வாங்கியவருக்கு ஒரு நோட்டீஸ் விட்டிருக்கிறார். இன்னும் 72 மணிநேரத்திற்குள்ளே பணத்தைக் கொடுக்கவில்லை என்றால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று.

72 மணி நேரம் என்ன... இரண்டு மாதம் வரைக்கும் எந்தப் பதிலும் வரவில்லை! இவர் மறுபடியும் சட்ட ஆலோசகரைப் போய் பார்த்தார். அவன் கொடுக்க முடியாது என்று சொல்லுகிறான். என்ன செய்ய சொல்லுகிறாய்? அந்த ஆளிடம் இதற்குமேலே என்னாலே எதுவும் செய்ய முடியாது என்று சொல்லி விட்டார். இவர் இன்னொரு சட்ட ஆலோசகரிடம் போனார். அவர் உடனே ஒரு வழக்கைத் தொடுத்தார் நீதிமன்றிலே. 5 மாதத்திற்கு பின்பு விசாரணை வந்தது. ஆனால் கடன் வாங்கியவர் நீதிமன்றத்திற்கு வரவில்லை. உடல் நிலை சரியில்லையாம்.

ஒரு வருடத்திற்கு அந்த ஆண்டே ஒரு திகதிக்கு வழக்கை ஒத்தி வைத்து விட்டார்கள். அதற்குப் பின்பு விசாரணை நடக்கவில்லை. ஏன் என்றால் இதற்கு இடையில் கடன் வாங்கியவர் வெளிநாட்டுக்குப் போய்விட்டார். கடன் கொடுத்தவர் ஒன்றரை வருடம் காத்துக் கொண்டு இருந்தார். அவர் திரும்பி வரவில்லை! மறுபடியும் ஒரு சட்ட ஆலோசகர். மறுபடியும் வழக்கு ஆரம்பம்.

எதிரி ஊரிலே இல்லை! வெளி நாட்டிலே இருக்கிறார். இந்த நிலையிலே வழக்கை நடத்த முடியாது என்று நீதிபதி சொல்லி விட்டார். இவர் விடவில்லை பெரிய நீதிமன்றத்திற்குப் போனார். அதிலே ஒரு சிக்கல். அந்த நீதிமன்றிலே விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்றால் கடன் தொகை குறைந்த பட்சம் 50 பவுண்ஸ்க்கு மேலே இருக்க வேண்டுமாம். ஆனால் கொடுத்து இருக்கின்ற கடன் தொகை 20 பவுண்ஸ். இவர் யோசித்தார். இன்னொரு 30 பவுண்ஸ் பணத்தை ஏற்கனவே கடன் வாங்கிய ஆசாமிக்கு அதிகார பூர்வமான அதிகாரி மூலமாக அனுப்பி வைத்தார். இப்போது பெரிய நீதிமன்றம் வழக்கை எடுத்துக் கொண்டு கீழ் நீதிமன்றத்திற்கு ஒரு உத்தரவு போட்டது. எதிரி இல்லாமலே வழக்கை நடத்தலாம் என்று!

ஆனால்... இந்த சமயத்திலே வெளிநாடு சென்ற கடனாளி ஊருக்கு திரும்பி வந்து விட்டார்.

கீழ் நீதிமன்றத்திற்குக் குழப்பம். எதிரி ஊரிலே இருக்கிறார். ஆனால் எதிரி இல்லாமலே வழக்கை நடத்தலாம் என்று உத்தரவு வருகிறது!

ஒன்றும் புரியவில்லை. விளக்கம் தேவை என்று மறுபடியும் ஒத்திவைப்பு. கடன் கொடுத்தவர் இன்னொரு பெரிய சட்ட ஆலோசகரிடம் போனார். உடனே உயர் நீதிமன்றத்திற்கு ஒரு முறைப்பாடு. அது காரணமாக நீதி அமைச்சர் ஒருவர் வந்தார். வழக்கைக் கேட்டுவிட்டு நீதிமன்றத்திற்கு விண்ணப்பியுங்கள் என்று சொல்லிவிட்டுப் போனார். இவரும் விண்ணப்பித்தார். கடன் வாங்கியவர் ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்க மறுபடியும் ஒத்திவைப்புக்கள்.

இஸ்ரேலிலே சட்ட ஆலோசகர் ஒருவர். கடைசியாக அவரிடம் சென்று விவரத்தைச் சொன்னார் கடன் கொடுத்தவர். சட்ட ஆலோசகர் பொறுமையாகக் கேட்டார். கடைசியாக ஒரு ஆலோசனையைக் கூறினார். இதோ பார்! உன்னிடம் கடன் வாங்கினானே அவனிடம் சென்று பலமாக ஒரு அடி கொடு என்றார். இவர் நேராக அந்த ஆளிடம் போனார். ஓங்கி ஒரு அடி கொடுத்தார். அடுத்த நிமிடம் அந்த ஆள் 50 பவுண்ஸ் பணத்தைத் திருப்பிக் கொடுத்தார். இவரும் வாங்கிக் கொண்டு வந்துவிட்டார்.

இதற்குத்தான் சொல்வது நியாயம் கிடைக்கிறது மட்டும் முக்கியமில்லை நியாயம் நேரத்திற்கு கிடைக்க வேண்டும் என்பதும் முக்கியம். அரை அடி நிலத்தை அடுத்தவன் ஆக்கிரமித்து இருப்பான்.

அதை மீட்டுக்கொண்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு இவன் நீதிமன்றத்திற்குப் போவான். முடிவு என்ன தெரியுமா? அவனிடம் இருந்த அரைக்காணி நிலத்தையும் விற்றுவிட்டு தெருவிலே அலைந்து கொண்டிருப்பான். நம் ஊரிலே நடந்துகொண்டிருக்கின்ற கதை இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா சிறைச்சாலையில் உணவகம், சிகையலங்கார நிலையம் என்பன திறந்து வைக்கப்பட்டதுடன், விடுதிக்கான அடிக்கல்லும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தால் கடந்த சனிக்கிழமை நாட்டிவைக்கப்பட்டுள்ளது. (படம்: வசந்தரூபன்)

# நாடாளவிய ரீதியில் பல்கலைக்கழக ஊழியர்கள் கவனயீர்ப்பு போராட்டம்




(யாழ்ப்பாணம்)

நாடாளவிய ரீதியில் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நேற்று பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டனர்.


ஊதியமுரண்பாடு உள்ளிட்ட சில கோரிக்கைகளின் அடிப்படையிலே குறித்த பணிப் புறக் கணிப்ப முன்னெடுக்கப்பட்டு வதாக பல்கலைக்கழக தொழிற் சங்கங்களின் ஒன்றிணைந்த குழு தெரிவித்துள்ளது.

அந்த வகையில் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு முன்பாக பல்கலைக்கழக கல்விசார ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதேவேளை வவுனியா பல்கலைக்கழக கல்விசார ஊழியர்களால் பேரணி ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் நாடாளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் தொழிற்சங்கங்களின் இணைந்த கூட்டுச் சங்கங்களின் போராட்டத்திற்கு பல்கலைக்கழக ஆசிரியர்சங்கம் மற்றும்மாணவர்சங்கங்கள்ஆதரவு தெரிவித்துள்ளன.(நி-6-33)

# கிளி. மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல்

## டலஸ் எம்.பி பங்கேற்பு



(கண்டாவளை)

இயலாமை உடைய நபர்கள் (மாற்றுத்திறனாளிகள்) எதிர்கொள்ளும் சவால்கள், பிரச்சினைகள், தற்பொழுது காணப்படும் வாய்ப்புக்கள் மற்றும் அவற்றை உரிய முறையில் நிவர்த்தி செய்வதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் முன்மொழிவுகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் கிளிநொச்சியில் இடம் பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று மாற்றுத்திறனாளிகள் பற்றிய பாராளுமன்ற ஒன்றியத்தின் தலைவர்.டலஸ் அழகப்பெரும தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது துறைசார் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்கள், மாற்றுத்திறனாளிகள் எனப் பலர்கலந்து கொண்டனர். (நி-6-315-316)

# தெங்கு,பாக்கு பயிர்ச்செய்கை விரிவாக்கம் தொடர்பில் ஆராய்வு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் தெங்கு மற்றும் பாக்கு பயிர்ச் செய்கை விரிவாக்கம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று மாவட்ட மேலதிக செயலாளர். எஸ்.எம் முரளி தரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் எஸ். எம். சமன் பந்துலசேன கலந்து கொண்டிருந்தார்.

மேலும் மாகாண உதவி விவசாயப் பணிப்பாளர், மாவட்ட விவசாயப் பணிப்பாளர், மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர், உதவித்திட்டமிடல் பணிப்பாளர், தெங்கு அபிவிருத்தி சபையின் பிராந்திய முகாமையாளர் உள்ளிட்டோரும் இக்கலந்துரையாடலில்பங்குபற்றியிருந்தனர். (நி-6-315)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3116

### பானு

தனிமையில் இருக்கும்போது உங்க மனைவியை நீங்க எப்படி கூப்பிடுவீங்க அண்ணே..



தனிமையில் நிம்மதியாக இருக்கும் போது .. அவளை ஏன்டா கூப்பிடனும்..

### லோஜன்

ஒரு ஓரமா உட்காந்து யோசிச்ச அப்புறம் தான் தெரியுது.. நம்ம வாழ்க்கையிலே blood group மட்டும் தான் positive ஆ இருக்குன்னு..



### தரங்கினி

சம்பந்தமே இல்லாம நம்ம life smooth ah போக ஆரம்பிக்குதுன்னா..



ஏதோ ஒன்று பெருசா நடக்கப் போகுது என்று அர்த்தம்..

### குமார்

ஒரு செலவை சமாளிச்சிட்டு பெருமூச்சு விடுறதுக்குள்ள..



அடுத்த செலவு வந்து விடுகிறது மிடில் கிளாஸ் வாழ்க்கையில்....!

### தமிழ்


கல்யாணம் பண்ணா நமக்கு இருக்கிற பிரச்சினை எல்லாம் சரி பண்ண ஒருத்தி வருவானு பாத்தா....



அவ பண்ற பிரச்சினைய சரி பண்ணவே இன்னொரு கல்யாணம் பண்ணனும் போல இருக்கே...

### கவி

மிளகாய் தூள் அரைச்சிட்டு வா என்று சொன்னதுக்கு...




மூதேவி வீட்டிலே இருந்த மிளகாய் தூள தூக்கிக் கொண்டு போயிருக்குது... வரட்டும் வச்சிக்கிறன்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 480





ஆகா! இது என்ன? அவ்வளவு ஆயிரமாயிரம் சிறிய அலைகளும் கோடானு கோடி வெண் நுரைத் துளிகளும் எங்கே போயின? மாயமாய்ப் போய் விட்டனவே? மறுபடியும் கடல் அமைதியுற்றுப் பச்சை நிறத்தகடு போல் காணப்படுகின்றதே! சற்று முன் கண்ட காட்சி உண்மையாக நிகழ்ந்ததா? அல்லது வெறும் பிரமையா? ஒருவேளை இந்த மந்திரவாதி ரவிதாஸனின் மந்திர சக்தியாகத்தான் இருக்குமோ!

"அதோ பார்த்தாயா? தம்பி! கடல் கூறியதை வானமும் ஆமோதிக்கிறது!" என்று ரவிதாஸன் தென்மேற்குத் திசையைச் சுட்டிக் காட்டினான்.

அவன் காட்டிய திசையில் - பச்சைக் கடலும் நீல வானமும் ஒன்று சேரும் மூலையில், ஒரு சின்னஞ் சிறு கரியமேகத் துணுக்கு ஒரு சாண் உயரம் எழுந்து நின்றது. அந்தக் கரிய மேகத் துணுக்கின் உச்சிப் பகுதி செக்கச் செவேலென்று இரத்தச் சிகப்பு வர்ணத்துடன் திகழ்ந்தது. சாதாரண நாட்களில் இந்தத் தோற்றத்தை வந்தியத்தேவன் கவனித்திருக்கவே மாட்டான். கடலும் வானும் சேரும் மூலையில் மேகத்திரள் காணப்படுவது ஓர் ஆச்சரியமா, என்ன? இல்லைதான்! ஆயினும் அந்தச் சிறிய தோற்றமும் அந்த வேளையில் நம் கதாநாயகனுடைய மனத்தைச் சிறிது கலக்கி விட்டது.

மறு கணத்தில் வந்தியத்தேவன் சமாளித்துக் கொண்டான். இந்த மந்திரவாதியின் வலையில் நாம் விழுந்து விடக்கூடாது. என்று மனத்திற்குள் உறுதி செய்து கொண்டான்.

ரவிதாஸனை ஒரு தடவையும் தேவராளனை ஒரு தடவையும் விழித்துப் பார்த்து, "அப்படியானால் ஏன் தாமதம்? வாருங்கள்!" என்று சொல்லிக் கத்தியை வீசினான்.

"அப்பனே! நாங்கள் பலியாவதற்கு முன்னால் எங்கள் குலதெய்வத்தைப் பிரார்த்தனை செய்ய விரும்புகிறோம். அரை நாழிகை அவகாசம் கொடு!" என்றான் ரவிதாஸன்.

"சரி! பிரார்த்தனையைச் சொல்லி விட்டு உடனே வாருங்கள். உங்கள் தந்திர மந்திரம் ஒன்றையும் என்னிடம் காட்ட வேண்டாம். காட்டினாலும் பலிக்காது!" என்றான் வந்தியத்தேவன்.

"இதோ வந்துவிடுகிறோம் எங்களுடைய ஆயுதத்தையும் இங்கேயே போட்டுவிட்டுப் போகிறோம், பார்!" என்றான் ரவிதாஸன்.

அப்படியே இருவரும் ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டு அம்மரக்கலத்தின் இன்னொரு புறத்துக்குச் சென்றார்கள்.

அந்த அரை நாழிகை, அச்சமயம் வந்தியத்தேவனுக்கும் தேவையாயிருந்தது. கடலிலும் வானிலும் ஏற்பட்ட தோற்றங்களினால் விளக்கமில்லாத கலக்கம் அவனுடைய உள்ளத்தில் எழுந்து அவன் உடம்பையும் சிறிது தளரச் செய்திருந்தது. அவசியம் நேர்ந்தால் ஒரே கத்தி வீச்சில் அந்த கிராதகர்கள் இருவரையும் தீர்த்துக்கட்ட அவன் முடிவு செய்திருந்தான். ஆனால் அதற்கு வேண்டிய பலம் தன் கையில் அச்சமயம் இருக்குமா என்ற ஐயம் ஏற்பட்டிருந்தது. ஆகையால் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு கையிலும் பூரண பலத்தை வருவித்துக் கொள்ளச் சிறிது அவகாசம் அவனுக்கு வேண்டியிருந்தது.

தென்மேற்கு மூலையில் கவனம் மறுபடியும் தற்செயலாகச் சென்றது. சற்று முன்னால் சாண் உயரம் தோன்றிய மேகத்திரள் இப்போது முழு உயரமாக வளர்ந்திருந்தது. உச்சியில் இரத்தச் சிவப்பு நிறம் சிறிது மங்கியிருந்தது. மேகத்திரள் மேலும் மேலும் உயர்ந்து வருவதாகத் தோன்றியது.

முதல் சிலுசிலுப்புடன் நின்று விட்டிருந்த காற்று மறுபடியும் நிதானமாக வரத் தொடங்கியது. கடலிலும் கலக்கம் காணப்பட்டது. சிறிய சிறிய அலைகள் நடனமாடத் தொடங்கியிருந்தன.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## கறுப்பு சீயூ!



பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் சீனா, பல அரசுகளாக பிரிந்து கிடந்தது. ஒவ்வொரு சிறிய பகுதியும், ஓர் அரசரால் ஆளப்பட்டது. ஒரு கால கட்டத்தில் "கியூ" என்ற பகுதியை சூயன் என்ற பேரரசர் ஆட்சி செய்தார்.

அவர் ஆடம்பரப் பிரியர். வண்ண வண்ண ஆடைகளை அணிவதிலும், மணம் தரும் விலை உயர்ந்த தைலங்களைப் பயன்படுத்துவதிலும் மிகவும் ஆர்வம் கொண்டிருந்தார். ஒவ்வொரு நாளும் தலைமுடி, மீசை, குறுந்தாடி ஆகியவைகளை வெட்டி சீர் செய்ய தனி அலுவலர்களை வைத்திருந்தார்.

ஒவ்வொரு நாளும் விதவிதமான பிராணிகளைப் பிடித்து உண்பதில் சூயன் மகிழ்ச்சி அடைந்தார். ஒருநாளில் ஆறு அல்லது ஏழு முறை உணவு சாப்பிடுவதிலும், விதவிதமான ஆடை அணிவதிலும், பின்னர் உறங்குவதிலும் ஆர்வம் மிகுதி. நாட்டு மக்கள் நலனில் அவருக்கு அதிக அக்கறை இல்லை.

அவரது அந்தப்புரத்தில் நூற்றுக்கும் அதிகமான பெண்கள் இருந்தனர். உழைப்பு, நற்பண்பு, ஒழுக்கம், தூய உள்ளம், நேர்மை ஆகியவற்றில் அவர் அதிக அக்கறை இல்லாமல் இருந்தார்.

அந்நாட்டில் ஒரு கிராமத்தில் சீயூ என்ற பெண்மணி வசித்தாள். அவள் சாக்கடை போன்ற கறுப்பு நிறத்தில் அழகில்லாமல் இருந்தாள். அவள் கண்கள் குழியில் இருப்பது போல் தோன்றின. தலைமயிர் நெருக்கம் இல்லாமல், இடை வெளி விட்டு வளர்ந்திருந்தது. அவளை எவரும் விரும்பவில்லை. அதனால், நாற்பது வயது வரை அவளுக்கு திருமணம் நடக்கவில்லை. எனவே, அவள் தனியாக வாழ்ந்து வந்தாள்.

அப்போது அண்டை நாடான நூயு என்ற பகுதிக்கும் கியூவுக்கும் இடையே அடிக்கடி சண்டை மூண்டது. மக்களால் நிம்மதியாக வாழ முடியவில்லை. இது சீயூவுக்கு மிகுந்த மன உளைச்சலைக் கொடுத்தது. ஒருநாள் அவள் தைரியமாக மன்னரின் அரண்மனைக்கு சென்றாள்.

காவலர்கள் அவளை உள்ளே விட மறுத்தனர். அவள் தனது வலிமை எல்லாம் சேர்த்து அவர்களை அடித்து தரையில் சாய்த்தாள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தவறுகளை எண்ணியே வருந்தி தளர்ந்து விடாமல் நல்லவைகளை செய்ய எழுந்து நடைபோடுவதே சிறப்பம்சமாகும். ~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நினைவேந்துகின்ற உரிமை கூட தமிழ் மக்களுக்கு இல்லையா?

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் தமிழர் தாயகம் எங்கும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

நேற்று முன்தினம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் ஆரம்பமாகியபோது, முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களை நினைவேந்தும் ஏற்பாடுகளும் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி பொதுமக்களுக்குப் பரிமாறுகின்ற நிகழ்வுகளும் நடக்கலாயின.

இதில் திருகோணமலை சம்பூர்ப் பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைத் தடுக்கின்ற வகையில் பொலிஸார் நீதிமன்றத்தின் தடை உத்தரவைப் பெற்றுக் கொண்டு, நினைவேந்தலைக் குழப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

தவிர, 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் கஞ்சி காய்ச்சி அதனைப் பருகி உயிர் காத்த அந்த நினைவை ஞாபகப்படுத்தும் பொருட்டு செய்யப்படுகின்ற முள்ளிவாய்க்கால் கஞ்சி சுகாதாரமற்ற உணவுபோல சித்தரிக்கப்பட்டு அதனையும் தடுக்கின்ற அநாகரிகத்தனத்தையும் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

உண்மையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது வன்னிப் பெருநிலப்பரப்பில் கொல்லப்பட்ட தமிழ் மக்களை நினைவுகூருகின்ற நிகழ்வு.

ஆம், வன்னி பெருநிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட கொடும்போரில் பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர். அன்றைய ஆட்சியாளர்கள் நினைத்திருந்தால், கொல்லப்பட்ட அத்தனை பொதுமக்களையும் காப்பாற்றியிருக்க முடியும்.

ஆனால் தமிழ் மக்கள் என்ற ஒரே காரணத்துக்காக அந்த மக்கள் கொல்லப்பட்டனர்.

இலங்கை ஆட்சியாளர்களினதும் படைத்தரப்பினரதும் இக்கொடுஞ் செயல் மிக மோசமான போர்க்குற்றமாகப் பதிவாகியுள்ளது.

நிலைமை இதுவாக இருக்கின்றபோதிலும் 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதை நினைவேந்துகின்ற உரிமைகூட நம் தமிழ் மக்களுக்கு இல்லை என்றால், இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களை சிங்கள ஆட்சியாளர்கள் அடிமைத்தனத்துடன் நடத்துகின்றனர் என்பது பட்டவர்த்தனமாகப் புலப்படுகின்றது.

அதிலும் முள்ளிவாய்க்கால் நினைவாகக் கஞ்சி காய்ச்சி அதனைப் பொதுமக்களுக்கு வழங்குவது கூட தடுக்கப்படுகிறதாயின் அதைவிட கொடுமை வேறு என்ன? இருக்க முடியும்.

நினைவேந்தல் என்பது அடிப்படை மனித உரிமையாக இருக்கின்றபோது, இலங்கைப் பொலிஸார் இல்லாதபொல்லாதவற்றை முன்வைத்து நினைவேந்தலைத் தடுக்க முற்படுவது ஆட்சியாளர்களின் வழிநடத்தலில் நடக்கிறதா? என்ற கேள்வியை ஏற்படுத்துகிறது.

எனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதுவிடயத்தில் கடுமையான உத்தரவுகளைப் பொலிஸாருக்குப் பிறப்பிக்க வேண்டும்.

இதைச் செய்யாதவிடத்து, அது தமிழ் மக்கள் மத்தியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் நிச்சயம் எதிர்வினையாற்றவே செய்யும்.

## தேர்தல்கள் ஆணைக்குழுவில் விஜயதாசவின் பெயர் சமர்ப்பிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவின் பெயர் தேர்தல்கள் ஆணைக் குழுவில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

எவ்வாறாயினும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய பதவிகள் தொடர்பில் எவ்வித அறிவிப்புக்களும் வழங்கப்படவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கட்சியின் தலைவர் பதவியை நேற்று முன்தினம் இராஜினாமா செய்திருந்தார்.

அதன் பின்னர், அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, நிறைவேற்று சபையின் ஏகமனதான தீர்மானத்தின் மூலம் கட்சியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டார்.

கட்சியின் பதில் பொதுச்செயலாளராக கடமையாற்றிய துஷ்மந்த மித்ரபாலவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதால், புதிய பதில் பொதுச் செயலாளராக சட்டத்தரணி கீர்த்தி உடவத்த நியமிக்கப்பட்டுள்ளார். (ம-7,10)

## தடுப்புக் காவலில் இருந்த கைதி யாழில் தப்பியோட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையத்தில் இருந்து கைதி ஒருவர் நேற்று தப்பித்துச் சென்றுள்ளார்.

கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்த போதே சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளார்.

இந் நிலையில் தப்பி ஓடிய கைதியை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-6-33)

## கரவெட்டியில் தொடரும் வாழைக்குலை திருட்டு

(கரணவாய்)

கரவெட்டிப் பகுதியில் அண்மைய நாட்களாக வாழைக்குலைகள் களவு போவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

வீடுகளிலும் தோட்டங்களிலும் வாழைக்குலைகள் களவு போவதாகவீட்டு உரிமையாளர்களால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சந்தேகத்தின் பேரில் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளார். (நி-6-60)

## வெடிபொருட்கள் மீட்பு ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.சாட்டி கடற்கரை பகுதியில் இருந்து சுமார் 3கிலோ வெடி மருந்துகள் உள்ளிட்ட வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதுடன், அவற்றை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊர் காவற்றுறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சாட்டி கடற்கரை பகுதியில் வெடிபொருட்கள் காணப்படுவதாக, நேற்று முன் தினம் பொலிஸ் விசேட அதிரடி படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்தில் சோதனையிட்ட வேளை 3 கிலோ 145 கிராம் வெடி மருந்துக்கள், ஆர்.பி.ஜி எறிகணைகள் 8 மற்றும் 60 எம்.எம். மோட்டார் எறிகணைகள் 12 என்பவை மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட எறிகணைகள் சிலவற்றில் இருந்து வெடி மருந்துகள் பிரித்து எடுக்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட வெடி பொருட்களையும், கைது செய்யப்பட்ட நபரையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக ஊர்காவற்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (நி-6-33)

## பஜாஜ் ஜெனுவின் புதையல் பரிசுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி நிறுவனத்தின் பஜாஜ் ஜெனுவின் புதையல் பரிசுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு யாழில் அண்மையில் இடம் பெற்றது.

மேலும் பரிசுப் போட்டியில் 1 ஆம் இடத்தினை யாழ்.வட்டுக்கோட்டையை சேர்ந்த சற்குணராசா தனுராஜ் வெற்றிகொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியலாளர்கள், கட்டட நிர்மாணத்துறை, கணனி பட வடிவமைப்பாளர், குளிர்சாதன மற்றும் வளி சீராக்கி தொழினுட்பவியலாளர், அலுமினியம் பொருத்துனர், படவரைஞர் குறித்த கற்கை நெறிகளுக்கான போதனாசிரியர்கள் (நாளாந்த அடிப்படை) வெற்றிடங்களிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித் தகைமை- க.பொ.த (சாதாரண தர) தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல், தொழில்சார் தகைமை- மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக் குழுவில் பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் NVQ-4 உடன் NVQ-5 அல்லது அதற்கு மேல் தொழில் தகைமை சான்றிதழ் உடன் ஒரு வருடம் கற்பித்தல் அனுபவம்.

அனுபவம்- சம்பந்தப்பட்ட துறையில் ஒரு வருடத்திற்கு மேலான தொழிற்துறை அனுபவம் குறித்த தகைமைகளுடைய ஆர்வமுடையவர்கள் தங்கள் சுயவிபரக் கோவை மற்றும் கல்வி, தொழிற் கல்வி, அனுபவச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் எதிர்வரும் 17.05.2024 ஆம் திகதிக்கு முன்னர் பிரதிப் பணிப்பாளர், இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை, 4 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல. 12.கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும் அல்லது நேரில் வந்து சமர்ப்பிக்க முடியும் என யாழ். இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையின் பிரதிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (நி-6)

## மிருசுவிலில் வாள்வெட்டு இரு இளைஞர்கள் படுகாயம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் பகுதியில்நேற்று திங்கட்கிழமை மதியம் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

மோட்டார்சைக்கிள்களில் வாள்களுடன் வந்த ஆறு பேர் மேற்படி இளைஞர்கள் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்திவிட்டு தப்பித்துச் சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் படுகாயமடைந்த மிருசுவிலைச் சேர்ந்த 30வயதான இரு இளைஞர்கள் சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதாரமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-30)

### மிருசுவில் புனித வேளாங்கண்ணி ஆலய திருவிழா

(யாழ்ப்பாணம்)

பழைய வாய்க்கால் மிருசுவில் புனித வேளாங்கண்ணி ஆலய திருவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் வழிபாடுகள் ஆரம்பமாகும்.

தினமும் மாலை 5.30மணிக்கு திருச்செபமாலையுடன் வழிபாடுகள் இடம்பெறும்.24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை5.30 மணிக்கு நற்கருணைப் பவனியும் மறுநாள் சனிக்கிழமை காலை 6.15மணிக்கு திருச்செபமாலையுடன் திருநாள் திருப்பலி ஆரம்பமாகும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (நி-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# வடமாகாண பளுதூக்கல் போட்டி

### ஆண்கள் பெண்கள் பிரிவில் யாழ்.மாவட்டம் முதலாம் இடம்



### பெண்கள் பிரிவில் வவு.மாவட்டம் இரண்டாம் இடம்



வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்திய மாவட்ட அணிகளுக்கிடையிலான வட மாகாண பளுதூக்கல் போட்டியில் ஆண்கள், பெண்கள் பிரிவில் யாழ். மாவட்ட அணியினர் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளனர்.

மாவட்ட அணிகளுக்கிடையிலான வடமாகாண பளுதூக்கல் போட்டிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை யாழ் துரையப்பா உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் ஆண்கள் பிரிவில் யாழ். மாவட்ட அணி 9 தங்கப் பதக் கங்கள், 6 வெள்ளிப் பதக்கங்கள், ஒரு வெண்கல பதக்கம் உட்பட 16 பதக்கங்களைக் கைப்பற்றி 1 ஆம் இடத்தையும், கிளிநொச்சி மாவட்ட அணி ஒரு தங்கப் பதக்கம், 2 வெள்ளிப் பதக்கங்கள், 2 வெண்கல பதக்கங்கள் உட்பட 5 பதக்கங்களை கைப்பற்றி 2 ஆம் இடத்தையும், வவுனியா மாவட்ட அணி 2 வெண் கல பதக்கங்களை கைப்பற்றி 3 ஆம் இடத்தையும் பெற்றனர்.

பெண்கள் பிரிவில் யாழ் மாவட்ட அணி 8 தங்கப் பதக்கங்கள், 7 வெள்ளிப் பதக்கங்கள், 3 வெண்கல பதக்கங்கள் உட்பட 18 பதக்கங்களை கைப்பற்றி 1 ஆம் இடத்தையும், வவு னியா மாவட்ட அணி 2 தங்கப் பதக் கங்கள், 2 வெள்ளிப் பதக்கங்கள், 2 வெண்கல பதக்கங்கள் உட்பட 6 பதக்கங்களைக் கைப்பற்றி 2 ஆம் இடத்தையும், முல்லைத்தீவு மாவ ட்ட அணி ஒரு வெள்ளிப் பதக்கம், 2 வெண்கலப் பதக்கங்கள் உட்பட 3 பதக்கங்களை கைப்பற்றி 3 ஆம் இடத்தையும் பெற்றிருந்தமை குறிப் பிடத்தக்கது. (நி-6-90-299)

# கிண்ணத்தை சுவீகரித்தது குருநகர் பாடும்மீன் அணி



பலாலி விண்மீன் அணியை வீழ்த்தி கிண்ணத்தை சுவீகரித்து குருநகர் பாடும் மீன் அணி வட மாகாண ரீதியில் பருத்தித்துறை லீக் அனுமதியுடன் மணற்காடு சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் அமரர் வென்செஸ்லாஸ் லடிஸ் லாஸ் ஞாபகார்த்தமாக நடத்தும் அணிக்கு 9 பேர் கொண்ட உதை பந்தாட்ட தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பாடும்மீன் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதியது. முதல்பாதியில் பாடும்மீன் அணி தமது சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தி முதல் கோலினை பதிவு செய்தனர் பின்பு விண்மீன் அணியினர் பல நெருக்கடிகளை கொடுத்த போதிலும் பாடும்மீன் அணியின் பின்களமும் கோல்காப்பா ளரும் சிறப்பாக செயற்பட முதல் பாதி 1-0 என்ற கோல் கணக்கில் நிறைவு பெற்றது

தொடர்ந்து இடம்பெற்ற இரண் டாம் பாதியில் தாமும் சளைத்த வர்கள் அல்ல என்று பல ஆக்கிர மிப்பு ஆட்டத்தினை விண்மீன் அணி வெளிக்காட்டிய போதிலும் பாடும்மீன் அணியின் கோல் காப்பா ளரும் பின்களமும் சிறந்து விளங்கி யதால் விண்மீன் அணியை இறுதி யில் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று பாடும்மீன் அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றி யது

போட்டியின் வெற்றிக்கோலினை பாடும்மீன் மத்தியகள அனுபவ வீரரான ஜோன் பதிவு செய்தார். அதேவேளை போட்டியின் ஆட்ட நாயகனாக பாடும் மீன் அணியின் நட்சத்திர வீரர் கீதன் தொடரின் வளர்ந்து வரும் வீரனாக பாடும்மீன் அணியின் ஹரிஷ் சிறந்த கோல் காப்பாளராக பாடும் மீன் அணி யின் ஆர்னோல்ட் தெரிவு செய்யப்பட் டமை குறிப்பிடத்தக்கது. (நி-6-106)

# மைலோ கிண்ணம்
# 10 வயது பிரிவில் சம்பியனான மன்.புனித சவேரியர் கல்லூரி




பாடசாலை மாணவர்களுக்கு இடையில் கொழும்பு ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் நேற்று முன்தி னம் இடம்பெற்ற தேசிய ரீதி யான "மைலோ" கிண்ண உதை பந்தாட்ட சுற்றுப் போட்டியில் சம் பியனான மன்னார் புனித சவே ரியார் ஆண்கள் தேசிய பாடசாலை யின் 10 வயதிற்குட்பட்ட அணியி னர்.

அதே நேரம் குறித்த சுற்றுப் போட்டியில் மன்/தோட்டவெளி GTMS ஆண்கள் 12 வயது பிரிவில் 2 ஆம் இடம் 10 வயது பெண் கள் பிரிவில் மன்னார் வட்டக் கண்டல் GTMS பாடசாலை அணியினர் 3 ஆம் இடம் மற்றும் மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் 10 வயதி ற்குட்பட்ட அணி 3 ஆம் இடத்தினை பெற்று இருந்தமை குறிப்பிடத்தக் கது. (நி-6-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆணொருவரின்...

உள்ள உணவகம் ஒன்றுக்கு பின் பகுதியிலேயே சடலம் மீட்கப்பட்டது.

வவுனியா ஊர்மிலாந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய ஆசீர்வாதம் என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். (ம-7,10,100,315,316)

## யாழ்.பல்கலை...

தமிழினப் படுகொலையை அடையாளப்படுத்தும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி நேற்று வழங்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக விஞ்ஞான பீட நுழைவாயிலில் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்கப்பட்டது.

2009ஆம் ஆண்டு இறுதிப் போரில் மக்கள் துன்பப்பட்டு, வறுமைப்பட்டு, உணவு இல்லாமல் தவித்தனர். எத்தனையோ சிறுவர்கள், பெரியவர்கள் சொல்ல முடியாத கொடுமைக்கு ஆளானார்கள்.

வலிகள் நிறைந்த அந்த நேரத்தில் கஞ்சிதான் இலட்சக்கணக்கான மக்களின் உயிரைக் காத்தது என்ற அடிப்படையில் அந்த நினைவைக் கடத்தும் வகையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்கப்பட்டது. (ம-7,10,33)

## கிணற்றுக்குள்...

கரைவலை வாடி ஒன்றில் தங்கி நின்று மீன்பிடியில் ஈடுபட்டுவந்த குறித்த நபர் திடீரென அப்பகுதியில் இருந்து காணாமல் போனதை அறிந்த மீனவர்கள் தேடுதல் நடத்தினர்.

இதன்போது குறித்த குடும்பஸ்தர் அருகில் இருந்த கிணற்றுக்குள் சடலமாக மீட்கப்பட்டார். அயலவர்கள் சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸாருக்கு தெரியப்படுத்தினர்

சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலி ஸார் சடலத்தை மீட்டு விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-7,10, 60)

## நினைவேந்த...

மழுங்கடிக்கின்ற செய்கையாகத்தான் காணப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்.வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று திங்கட்கிழமை அவர் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

உயிரிழந்தவர்களை நினைவுகூர சட்டரீதியான ஏதாவது சிக்கல் இருக்கின்றதா என்பதை தெளிவுபடுத்துமாறு ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர், அங்கு மேலும் தெரிவிக்கையில்,

உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்கோ அல்லது காயப்பட்டவர்கள் சார்பாக ஒரு நினைவேந்தல் நடத்துவதற்கோ அல்லது தாங்கள் அனுபவித்த கஷ்டங்களை பற்றி ஒரு நினைவேந்தலை நடத்துவதற்கோ சட்டத்திலே எந்தவிதமான தடையும் கிடையாது. அது மட்டுமல்ல சர்வதேச ரீதியிலே நினைவேந்தல் செய்யப்படுவது அத்தியாவசியமானது என்கின்ற கோட்பாடு மேலோங்கி இருக்கிறது.

ஆகையினாலே சர்வதேச சட்டத்திலே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள ஒரு விடயம் பாதிக்கப்பட்டவர்கள் தங்களது நினைவேந்தல்களை செய்வது அவசியம் என்கின்ற உலக ஒழுங்கிலே நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆகையினாலேயே அதனை தடுக்கிற வண்ணமாக செய்கின்ற செயற்பாடு அனைத்தும் எங்களது மக்களது உரித்தை சர்வதேச மட்டத்தில் எங்களுக்கு இருக்கின்ற உரிமையை மழுங்கடிக்கின்ற செய்கையாகத்தான் காணப்படும் என்றார். (ம-7,10,60)

## யாழ்.சிறைச்...

நீதிமன்றத்தில் இருந்து யாழ்ப்பாண நோக்கி கைதிகளை ஏற்றி வந்த யாழ்ப்பாணம் சிறைச்சாலை பேருந்தும் ஊர்காவற்றுறை பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ஹயஸ் வாகனமும் மோதுண்டு விபத்து ஏற்பட்டுள்ளது

இதன்போது ஹயஸ் வாகனத்தில் பயனித்த ஒருவர் ப்டுகாயமடைந்த நிலையில் ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிறைச்சாலை பேருந்தும் ஹயஸ் வாகனமும் சேதமடைந்துள்ளது.

பேருந்தில் பயணித்த சிறைக்கைதிகள் வேறொரு வாகனத்தில் யாழ். சிறைச்சாலைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10,33)

## வடக்கில்...

சாத்தியம் காணப்படுவதாக இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது

இதுகுறித்து வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தளம்பல் நிலை காரணமாக வடக்கு உள்ளடங்கலாக நாட்டின் பெரும்பாலான மாகாணங்களில் பல இடங்களில் பி.ப. 1.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மத்திய, சப்ரகமுவ, கிழக்கு, தென் மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் 100 மி.மீக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

கிழக்கு மற்றும் தென் மாகாணங்களின் கரையோரப் பிரதேசங்களில் சில இடங்களில் காலை வேளையிலும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றுள்ளது.(ம-7,10)

## 12...

மாணவி விஜயகுமார் விதுஷா (வயது-12) என்பவரே உயிரிழந்தவராவார். (ம-7,10)

## கட...

மன்னார் பள்ளிமுனை மேற்கு பகுதியைச் சேர்ந்த எஸ்.ஏ.ஜான்சன் என்ற குடும்பஸ்தர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் உள்ளடங்களாக மேலும் சில மீனவர்கள் வள்ளம் ஒன்றில் தொழிலுக்குச் சென்றுள்ளனர்.

இதன் போது நேற்று மாலை 4 மணியளவில் திடீரென கடும் காற்று மற்றும் மழை பெய்துள்ளது.

இதன் போது குறித்த மீனவர்கள்சென்றவள்ளம் கடலில் மூழ்கியது.

ஏனையவர்கள் தப்பியபோதும் குறித்த குடும்பஸ்தரான மீனவர் கடலில் மூழ்கி உயிரிழந்தார்.

மேலும் உயிரிழந்தவரின் சடலம் மீட்கப்பட்டு மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை மன்னார் வைத்தியசாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10,285)

## யாழ்.பல்கலையில் குருதிக்கொடை

குருதியால் தோய்ந்த நம் தேசத்திற்காய் ஒரு துளி குருதி எனும் தொனிப்பொருளில் 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் நினைவாக இரத்த தான முகாம் ஒன்று இன்று காலை 09.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முதன்மை வளாகத்தில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது. (ம-7,10)


மஹஜன சம்பத
திகதி 2024.05.13
சீட்டிழுப்பு இலக்கம் 5474
T 9 3 7 1 5 4
அத சம்பத T 7 1 5 4
சீட்டிழுப்பு இலக்கம் 049

தன நிதானய
திகதி - 2024.05.13
சீட்டிழுப்பு இலக்கம் - 1504
U 07 23 30 80 U
Double Chance 70603

மெகா பவர்
திகதி 13/05/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1822
V 14 14 38 59 79
Double Chance 97068

லக்கி 7 VIP
திகதி 2024.05.13
சீட்டிழுப்பு இலக்கம் 300
J 5 6 9 1 5 0 J

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3716
சீட்டிழுப்பு திகதி 13.05.2024
H 31 35 42 61
H 85274

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.05.13
சீட்டிழுப்பு இலக்கம் 0783
மீனம் 02 15 54 59 மீனம்
54941 11

உத்தியோகபூர்வ முடிவுகள்
13.05.2024 வெற்றி வாரம் 182 வர்ணம் ஊதா
H 5 5 6 6 5 2
14197
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 22,195,456.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2448 வர்ணம் ஊதா திகதி 13.05.2024 தினம் திங்கள்
23 39 48 73 T
26080
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 88,183,866.40

சனிதா
2024.05.13 வெற்றி வாரம் 4609
04 34 42 55 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,692,283.20
0 4 5 6 0

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4160 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.05.13 தினம் திங்கட்கிழமை
07 13 46 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 8,914,176.00
685277

V 01 21 66 67 72
1624 பச்சை 13.05.2024 திங்கள்
142229
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 522,425,616.60

ஜயோதா Jayoda
2024.05.13 வெற்றி வாரம் 2024
10 16 45 56 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 23,395,846.80
70882

திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2274
சீட்டிழுப்பு திகதி : 2024.05.13
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 112,807,241.60
ADA KOTIPATHI
18 42 52 60 W
527730


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜபக்ஷ...

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

இந்த மாதம் எமக்கு மிகவும் முக்கியமானது.எமது வேதனைகளை வெளிப்படுத்துகிறது.நான் இந்த சிரட்டையை சபா பீடத்திற்குச் சமர்ப்பிக்கின்றேன். இதுதான் முள்ளிவாய்க்காலில் எமது மக்களுக்குக் கஞ்சி வழங்கிய சிரட்டை.குடிப்பதற்கு ஒரு உபகரணம் இருக்கவில்லை.

கஞ்சி காய்ச்சுவதற்கு அரிசி இல்லை. உப்பில்லை தண்ணீர் கூட எடுக்க முடியாத நிலைமை.இவ்வாறான நிலைமையில் வெறும் உப்பில்லாத கஞ்சியைக் காய்ச்சி இந்த சிரட்டையில் தான் அந்த மக்கள்,குழந்தைகள் குடித்து உயிர்தப்பினார்கள்.

அதனால் முள்ளிவாய்க்கால் அடையாளமாக இந்த சிரட்டையைச் சபா பீடத்திற்குச் சமர்ப்பிக்கின்றேன். தயவு செய்து பாராளுமன்றத்தின் நூதனசாலையில் இந்த சிரட்டையை வையுங்கள் என வலியுறுத்தினார்.

மேலும்,இறுதிக்கட்ட யுத்தத்தின் போது பசியில் வாடி கஞ்சிக்காக வரிசையில் நின்ற குழந்தைகள் மீது குண்டுகளை வீசி கொலை செய்ய கோட்டாபய ராஜபக்ஷ கட்டளை பிறப்பித்தார்.

14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டதற்குக் காரணமாக இருந்த ராஜபக்ஷ குடும்பத்தை சேர்ந்தவர்கள் ஒருபோதும் நிம்மதியோடு இருக்கப்போவதில்லை.

இறந்துபோன முள்ளிவாய்க்கால் ஆத்மாக்கள்,இவர்களை ஒருபோதும் நிம்மதியாக இருக்க விடாது.

யுத்தம் இடம்பெற்றபோது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ,யுத்தம் நடக்கின்ற பிரதேசங்களில் 75000 மக்கள் மட்டுமே உள்ளார்கள் என்று கூறினார்.

ஆனால் யுத்தம் முடிந்த பின்னர் 410,000 க்கும் மேற்பட்ட மக்கள் வவுனியா இடைத்தங்கல் முகாம்களுக்குக் கொண்டு வரப்பட்டார்கள்.

75 ஆயிரம் மக்களுக்கு உணவு அனுப்பி 400,000 மக்களைப் பட்டினியில் போட்டு பட்டினியால் எம் மக்கள் சாகடிக்கப்பட்டார்கள்.

41 ஆயிரம் மக்கள்தான் இடைத்தங்கல் முகாம்களுக்குக் கொண்டுவரப்பட்டார்கள் என்றால் எத்தனை ஆயிரம் மக்கள் அங்கே கொன்றொழிக்கப்பட்டார்கள்.கஞ்சிக்காக வரிசையில் நின்ற குழந்தைகள் மீது குண்டுகள் வீசப்பட்டு அவர்கள் கொல்லப்பட்டார்கள். இதனைச் செய்தவர் கோட்டாபய ராஜபக்ஷ.

69 இலட்சம் சிங்கள வாக்குகளினால் நான் வந்தவன். எனக்குத் தமிழ் வாக்குகள் தேவையில்லையென மார்தட்டி வந்த கோட்டாபய ராஜபக்ஷவை அதே சிங்கள மக்கள், அதே சிங்கள இளைஞர்கள் அரகலய போராட்டத்தின் மூலம் ஓட ஓட விரட்டியடித்தார்கள். தர்மம் வென்றது. கர்மம் அவரை நாட்டிலிருந்து அகற்றியது. இருக்க இடமில்லாமல் தெருத்தெருவாக திரிந்தார்.

இறந்துபோன முள்ளிவாய்க்கால் ஆத்மாக்கள் இன்றும் கோட்டாபய ராஜபக்ஷவை நிம்மதியாக உறங்க விடவில்லை. 146,000 க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டதற்க்காரணமாக இருந்த ராஜபக்ஷ குடும்பத்தை சேர்ந்தவர்கள் எந்தக்காலத்திலும் நிம்மதியோடு இருக்கப் போவதில்லை என்பதையும் உறங்கப்போவதில்லை என்பதையும் கர்மவினையும் வரலாறும் அவர்களுக்குக் கற்பிக்கும்.

75 ஆயிரம் மக்களுக்கு உணவு அனுப்பி அங்கு இந்தளவு மக்கள்தான் இருக்கின்றார்கள் என்று கூறி ஆயிரக்கணக்கான மக்களைப் பட்டினியால் கொன்றவர்களுக்கு இந்த உலகம் என்ன தண்டனை வழங்கப்போகின்றது? மக்கள் அங்குள்ள ஐ.நா. அமைப்புக்கள், செஞ்சிலுவைச் சங்கம் போன்றவற்றின் முன்னாள் நின்று எங்களை விட்டுப்போகாதீர்கள் எனக்கதறியபோது இந்த அமைப்புக்கள் மூட்டை முடிச்சுகளுடன் வன்னியிலிருந்து வெளியேறின.

ஆதரவு குரல் எழுப்பிக் கதறிய அந்த மக்களைத் தெருவிலே விட்டு இந்த அமைப்புக்கள் தப்பியோடின. இவர்கள் கைவிட்டு ஓடியதால் அத்தனை ஆயிரம் மக்கள் அந்த மண்ணில் கொல்லப்பட்டார்கள். இதற்கு ஐ.நா. மற்றும் சர்வதேச அமைப்புக்கள் பொறுப்பு சொல்ல வேண்டும்.

வெள்ளைக் கொடியுடன் வந்தவர்கள் கொல்லப்பட்டதற்கு நோர்வே சமாதானத்தூதுவர் எரிக் சொல்ஹெய்மும் பொறுப்புக்கூற வேண்டும். இன்றும் தமிழர் தெருவில் நிற்பதற்கு யார் காரணம்?

யுத்தத்திற்கு இலங்கை அரசுக்கு ஆயுதம் வழங்கிய நாடுகள் யுத்தம் முடிந்த பின்னர் தமிழர் பிரச்சினைக்கு ஏன் தீர்வு வழங்க முன்வரவில்லை? ஏன் இந்த நாடுகளினால் இலங் கைக்கு அழுத்தம் கொடுக்க முடியவில்லை?ஆகவே நாங்கள் பேச முடியாத மனிதர்களாக, அநாதைகளாக,உலகப்பந்தில் ஒதுக்கப்பட்ட ஒரு இனமாக இருக்கின்றோம். தமிழ்த்தேசிய இனம் தொடர்ந்தும் அழிக்கப்டுகின்றது. அந்த இனத்தின் நிலம், உரிமைகள் பறிக்கப்படுகின்றது என்றார்.

(ம-7,10)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-360)

076 825 7716 (ஆகாஸ்)

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் 31 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை 15 இலட்சம் தொடக்கம் 20 இலட்சம் வரை உள்ளது.
- தரகர் தேவையில்லை.

(697)

077 88 62 927

TECHNO WORLD

தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை.

A/L 2026

தொழில் நுட்பப் பிரிவு

ஆரம்பம் : 19.05.2024 (ஞாயிற்றுக்கிழமை)
காலை 8.30 மணி

A/L 2024,2025 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

(C-0357)

தொடர்புகளுக்கு : 077 017 5346


31ம் நாள் நினைவில்...

தோற்றம் 10 - 09 - 1942

மறைவு 15 - 04 - 2024



அமரர் கந்தையா பாலசுப்பிரமணியம்

மகத்தான உங்கள் வாழ்வு முடிந்து மாதமொன்று கடந்ததுவோ!
ஜெகத்தினில் வாழ்வாங்கு வாழ்ந்திட்ட காலமும் முடிந்ததுவோ!
பகட்டான வாழ்வின்றிப் பக்குவமாய் வாழ்ந்திருந்தீர் – உங்கள்
திகட்டாத செயல்களினால் நெஞ்சமெல்லாம் சேர்ந்திருப்பீர்!

இலட்சுமி வாசம்,
இணுவில் கிழக்கு.

(0061)

இங்ஙனம்
குடும்பத்தினர்


CANADA VISA

- உங்கள் குடும்பத்துடன் பயணிக்கலாம்.
- வங்கி வசதிகள் செய்து தரப்படும்.
- 20 வருட அனுபவம், 1800 பேரை அனுப்பி வைத்துள்ளோம்.
- கிடைத்தவர்களை நேரடியாகப் பார்வையிடலாம்.

(511)

021 222 5686
076 424 7111
Expo Net Overseas Consultants
345, Kasthuriyar Road, Jaffna.

விற்பனையாளர் தேவை (பெண்கள்)

எமது ஜவுளி நிறுவனத்திற்கு வியாபார உதவியாளர் தேவை.

(747)

சென்னை பெஷன் வேல்ட்,
63, பெரியகடை வீதி,யாழ்ப்பாணம்

வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் அமைந்துள்ள இரும்பகத்திற்கு வேலையாட்கள் தேவை

075 617 8008

(740)

மடிக்கணனி தேவை

பாவித்த நல்ல நிலையிலுள்ள மடிக்கணனி (Laptop) தேவை.

தொடர்புகளுக்கு:
076 097 3121

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0361)

உடனடி வேலை வாய்ப்புக்கள்
EXECUTIVE OFFICER
✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/=
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
✓ வயது-22 தொடக்கம் 35
✓ தகுதி- பட்டதாரிகள் (C-0361)
(ஆங்கில அறிவு அவசியமானது)
V2 TRAVELS
AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER
போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்
49A, சப்பல் [illegible] யாழ்ப்பாணம். 0777-068-777


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்றெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org